1-7-56

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



OFFICE OF THE REGISTRAR OF ...
13 JUL 1956
MAD...

263
3.56.

# செய்திகள்

## செந்தமிழ்ச் செல்வர் ம. பொ. சி.

ஜூன் 26-ஆம் தேதியன்று சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்களுக்குப் பொன் விழா (ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா) நடைபெற்றது. செந்தமிழ்ச் செல்வர் என்ற பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி, கார், நிதி முடிப்பு முதலியனவும் தமிழ்ப் பெருமக்களால் வழங்கப்பட்டன. தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் அவர் செய்துள்ள சிறப்பான சேவைகளைப் பாராட்டி, தமிழறிஞர்களும் தலைஞர்களும் எழுத்தாளர்களும் பல கட்சித் தலைவர்களும் பேதமின்றி வந்து பேசி விழாவைச் சிறப்பித்தார்கள்.

## இரண்டாவது டெஸ்ட் மாட்சு

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் மாட்சில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. முதல் டெஸ்ட் 'டிரா'வாக முடிந்தது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 285 ரன்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 257 ரன்களும் எடுத்தது. இங்லாந்து முதல் இன்னிங்ஸில் 171 ரன்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 186 ரன்களுமே எடுத்தது.

## சுதர்சன சர்க்கா

சுதர்சன சர்க்கா என்று ஒரு புதிய ராட்டையை ஒருவர் பெங்களூரில் கண்டு பிடித்து, அதை இயக்கியும் காட்டினார். மணிக்கு 1000 கஜம் (20-ஆம் நம்பர்) நூல் இதில் நூற்க முடிகிறதாம். அலுமினியத்தினால் ஆன இந்தச் சர்க்கா ஐம்பது ரூபாயில் தயாராகிவிடுமாம். அதிக அளவில் தயாரிப்பது என்றால் இது பாதி விலையிலேயே அடங்கிவிடுமாம்.

## தசாம்ச நாணய முறை

அடுத்த 1957-ஆம் வருஷம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நம் நாட்டில் தசாம்ச நாணய முறை அமுலுக்கு வருகிறது. இந்தப் புதிய முறையின்படி, ரூபாய் அப்படியேதான் இருக்கும். ஆனால் ரூபாயில் இப்பொழுதுள்ள 64 காலணாக்களுக்குப் பதிலாக 100 நயா பைசாக்கள் இருக்கும். அணா என்பது கிடையாது. நயா பைசாக்கள்தான். 50 நயா பைசா அரை ரூபாய். 25 நயா பைஸா கால் ரூபாய். இரண்டணா, ஓர் அணா, காலணா நாணயங்கள் மட்டும் இனிக் கிடையா. புது முறையில் 2 நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா பைசா ஆகியவைதான் முதலில் அமுலுக்கு வரப்போகின்றன.

## திலகர் நூற்றாண்டு விழா

லோகமான்ய பாலகங்காதர திலகர் பெயரைச் சொன்னால் முன்பு நம்மை ஆண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் நடு நடுங்கிக்கொண்டிருந்தது. அத்தனை சக்தி வாய்ந்த தேசத் தலைவராக அவர் விளங்கினார். அவருடைய நூற்றாண்டு விழா அடுத்த மாதம் வருகிறது. அதன் ஞாபகார்த்தமாக அவருடைய உருவம் பொதிந்த இரண்டணாத் தபால் தலை ஜூலை 23-ஆம் தேதி எல்லா இடங்களிலும் விற்பனைக்கு வருகிறது.

## புதிய கமிஷனர்

சென்னைக் கார்ப்பரேஷனுக்கு உயர் திரு டி. பாலசுந்தரம் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஜூன் 30 முதல் பதவி வகிப்பார்.

கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 13

1 - 7 - '56

குழந்தைகளே! பக்கம் 2
நகை வேண்டாம், பாப்பா! 3
ஜால வித்தை .. 4
சைனு சு - சூ! .. 5
ஏமாந்தவன் யார்? .. 11
ஜெயிலில் .. 13
அடுத்த வீட்டு மாமா .. 18
எலி வளை தோண்டக் கண்டேன் .. 23
கவியரங்கம் .. 27
செவிடன் யார்? .. 28
முடிவு இதுதானு? .. 29
சலனம் .. 33
புலிக் குட்டி .. 37
ரேடியோ விமரிசனம் .. 40

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ண
செய்திகள் - 2 - அட்டை.
பேனு நண்பர்கள் 3 அட்டை.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ 14/4

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

# கண்ணன்

## சித்திரப் போட்டி

## முடிவு

பரிசு பெற்றவர்கள்:

1. ஸி. எஸ். சித்ரா, (மைசூர்)
2. ஹென்றிராசு, திரிகோணமலை (இலங்கை)
3. கே. நரசிம்மன், பீமண்ணபேட்டை
4. ந. முகமது காசிம், புதுக்கோட்டை.
5. அ. சுப்பையா, கரிவலம்வந்தநல்லூர்
6. எஸ். வரதன், சென்னை-4

மேற்கண்ட ஆறு பேர்களுடைய சித்திரங்களும் பரிசு பெறுவதற்குரியன என்று பஞ்சாயத்தார்கள் ஒருமுகமாகக் கருதி, அதன்படியே முடிவு செய்யப்பட்டது.

கண்ணனில் படங்களை வெளியிட்டு, பரிசுத் தொகையும் அனுப்பப்படும். இதில் பங்கு கொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும் தேர்வுக் குழுவினருக்கும் நன்றி.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

கண்ணனில் ஆரம்பமாகியுள்ள புதிய தொடர்கதையான சைனு சு-சூவைப் பாராட்டி எழுதியுள்ள குழந்தைகளுக்கெல்லாம் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பத்தைவிட, போகப் போக, கதையின் வேகமும் சுவையும் மிகுதியாகப் போவதை நீங்கள் காணலாம்.

நீங்கள் எல்லாம் சித்திரப் போட்டியின் முடிவை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். சித்திரப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தைகளின் பெயர்களை முன்பக்கத்தில் பார்த்திருப்பீர்கள். பரிசு பெற்ற அந்தக் குழந்தைகளுக்கு உங்கள் சார்பாகவும் கண்ணன் சார்பாகவும் என் மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரிசு பெற்ற சித்திரங்கள் கண்ணனில் பிறகு வெளிவரும்.

முன்னர் அறிவித்திருந்தபடி புரொபஸர் விஞ்ஞானத்தின் சித்திரக் கட்டுரை அடுத்த இதழில் தொடங்குகிறது, நமது நாட்டில் வெகு காலமாக வழங்கி வரும் தெனாலிராமன், மரியாதைராமன் போன்ற கதைகளை அவ்வப்போது கண்ணனில் வெளியிட வேண்டும் என்று சில பெற்றோர்கள் யோசனை கூறிவருகிறார்கள். அந்தக் கதைகள் எல்லாம் வேடிக்கைக்கு வேடிக்கையாகவும், அறிவுக்கு விருந்தாகவும், நல்ல நீதி ஒன்றை விளக்குவதாகவும் விளங்குபவை. அதனால்தான் அந்தக் கதைகள் இவ்வளவு காலம் நம் நாட்டில் உயிரோடு உலவி வருகின்றன. அச்சு, புத்தகம் முதலியன எதுவும் இல்லாத காலம் முதல் அவை நாட்டில் கர்ணபரம்பரையாக வழங்கிவருகின்றன. எங்கேயாவது உபயோக மில்லாத விஷயங்கள் உயிரோடு நிற்குமா? அந்தக் கதைகளை இப்போது சொல்வார் குறைந்து போய்விட்டார்கள். பத்திரிகைகளில் கவர்ச்சியோடு படிக்கும்படி எழுதுவாரும் அடியோடு இல்லை. அந்தக் கருத்துப் பொக்கிஷங்களையெல்லாம் முடிந்தவரையில் பிரசுரம் செய்து, நமது சிறுவர் உலகம் அவற்றைப் படித்துப் பயனடையும்படிச் செய்யவேண்டும் என்று பெற்றோர்கள் எண்ணுவது சரியே. அதை முன்னிட்டே அவ்வப்போது புதிய, எளிய, அழகிய முறையில் அந்தக் கதைகளைக் கண்ணனில் வெளியிடலாம் என்று ஆசை. புதிய கதை, புதிய கதை என்று போய்க்கொண்டே இருந்தால் பழைய விஷயங்களையும் நாம் தெரிந்து கொள்ளாமல் இருந்துவிடலாமா?

கவிஞர் வரிசையில் இன்னும் ஒரு கட்டுரை பாக்கியுள்ளது. அது அடுத்த இதழில் வெளியாகும். அது முடிந்துவிட்டால் சங்ககாலக் கவிஞர்கள் வரிசை முடிவுற்றுவிடும். பிறகு இடைக்காலக் கவிஞர்கள் வரிசையை விரைவிலேயே தொடங்க எண்ணியுள்ளோம். அதற்கும் பிறகு தற்காலக் கவிஞர்களையும் வெளியிட இருக்கிறோம்.

இந்த இதழ் முதல் கண்ணனுக்குப் பிற்பகுதி அரைவருஷம் ஆரம் பம். ஜூன் முடியச் சந்தா செலுத்தியிருப்பவர்கள் மீண்டும் உடனே புதுப் பித்துவிடவேண்டும். புதிதாகச் சேருபவர்களும் இப்போது சேருவது தான் நல்லது. ஜூலை முதல் டிசம்பர்வரையில்கூடச் சேரலாம். நடுவில் தீபாவளி வருவதால் அந்த மலரின் விலை ரூபாய் ஒன்றையும் சேர்த்து ரூ. 2/8/- யாக அனுப்பவேண்டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கண்ணன் கழக அங்கத்தினர்களைப் போலவே கண்ணன் சந்தாதார் களுக்கும் கண்ணன் வெளியீடுகள் வாங்கினால் ரூபாய்க்கு இரண்டணா தள்ளுபடி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். அடுத்த அறிவிப்பு வரைதான் இந்தச் சலுகை. எனவே எல்லாச் சந்தாதார் களும் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

ஆசிரியர்



# நகை வேண்டாம் பாப்பா!

**தமிழ் ஒளி**

பச்சைக் கிளிக்கு நகையில்லை!
பாடுங் குயிலுக் கணியில்லை!
இச்சை மைனாப் பறவைக்கும்
ஏதும் கழுத்தில் நகையில்லை!
கச்சை சதங்கை யில்லாமல்
காட்டில் ஆடும் மயிலுக்கும்
உச்சிக் கொண்டை நகையில்லை!
உனக்கேன் பாப்பா நகையெல்லாம்?



# ஜால வித்தை

எஸ். டி. முகர்ஜி

## எனக்கும் தெரியுமே!

பின்வரும் எட்டுப் பொருள்களை மேஜைமீது எல்லாருக்கும் தெரியும்படியாக எடுத்து வை.

பேனு, ஸ்கேல், பென்சில், புத்தகம், கரும்பலகை, கைக் கடிகாரம், மூக்குக் கண்ணுடி.

பிறகு வேடிக்கை பார்க்கும் சிறுவர்களில் யாரேனும் ஒருவனைக் கூப்பிட்டு மேலேயுள்ள ஏதேனும் ஒரு பொருளை மனத்தில் நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அந்தப் பொருளின் பெயரைச் சிறு காகிதத்தில் எழுதி மற்ருெரு வரிடம் கொடுத்து விடட்டும். சில நிமிஷங்களில் அந்தப் பொருளின் பெயரைச் சொல்லிவிடலாம். ஆனுல் ஒரு நிபந்தனை. அந்தச் சிறுவன் ஒன்று, இரண்டு, மூன்று என்று, நினைத்தப் பொருளில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை எண்கள்வரையில்



சொல்லிவிட்டு நிறுத்திவிடவேண்டும். நிறுத்தி முடிந்ததும் நாம் அந்தப் பொருளை உடனே சொல்லி விடலாம்.

எப்படி என்கிறீர்களா? அவன் நினைத்தப் பொருளில் நான்கு எழுத்துக்கள் இருக்கின்றன என்ருல் நான்கு வரை எண்களைச் சொல்லி நிறுத்துவான். நான்கு எழுத்துக்கள் அடங்கிய பொருள் மேஜைமீது ஒன்றுதானே இருக்கும்? இதுபோல் மற்றப் பொருள்களையும் சொல்லிவிடலாம்.

## திராவகம் குடிப்பவன்!



வித்தைக்காரன் ஒருவன் அமிலம் நிறைந்த சீசாவிலிருந்து ஒரு துளியைச் சோதனைக் குழாயில் எடுத்துக்கொண்டு, அது சுத்த கந்தகாமிலம் என்பதைப் பரிசோதனை மூலம் காட்டுகிருன். பிறகு அந்தச் சீசாவிலுள்ள அமிலத்தைக் குடித்துவிடுகிருன்! இது யாரால் முடியும்?

'கந்தகாமிலம்', 'அபாயம்' என்று குறித்துள்ள கண்ணுடி மூடியைக் கொண்ட காலி அமில சீசா ஒன்று, சோதனைக் /குழாய் ஒன்று, ஒரு சிறு தாமிரத் துண்டு. இவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் சீசாவில் அமிலத்திற்குப் பதிலாக அந்த நிறம் வாய்ந்த (Syrup) சர்பத் நிரப்புங்கள். சோதனைக் குழாயில்மட்டும் ஒரு சில துளி கந்தகாமிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதை ரகசியமாகச் செய்யவேண்டும்.

பிறகு சோதனைக் குழாயில் சுத்த அமிலத்தை எடுத்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டு, சீசாவிலுள்ள அந்தக் கலர் சர்பத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது சோதனைக் குழாயில் தாமிரத்தைப் போட்டு அது உண்மையில் அமிலம் என்பதை நிரூபித்துவிடலாம்

"இப்போது அந்த அமிலத்தை நான் சாப்பிடுகிறேன், பாருங்கள்" என்று சீசாவிலுள்ள சர்பத்தைக் குடிக்கவா முடியாது?



இனிமேல்தான் இந்தக் கதையே ஆரம்பிக்கிறது. இது வரைக்கும் சொன்னதெல்லாம் வெறும் ஆரம்பம்தான்.

ஷங்கங் நடு நிசியில் வந்து விட்டுப் போன பிறகு சீனன் வெகு நேரம் வரையில் தூக்கம் வராமல் விழித்துக்கொண் டிருந் தான். முதலில் சில்லறைச் சாமான்களை வாங்கிக் கூலிக்கு விற்கலாம்; பிறகு சிறுகச் சிறுக, சொந்தமாகவே விற்கலாம், அதற்கும் அப்புறம் ஓர் இடத்தில் கடைமாதிரிப் பரப்பிக்கொண்டு அலையாமல் விற்கலாம். இப்படியே விற்றுக்கொண்டு போனுல் அவனிடம் நாலு காசு சேர்ந்து விடும். நாலு காசு சேர்ந்து விட்டால் சாப்பாட்டைக்கூட அவன் தனியாக வைத்துக்கொள்ள லாம். வீட்டுக்கே போகவேண்டிய தில்லை. வேளா வேளைக்குத் திட்டும் அடியும் வாங்க வேண்டிய தில்லை; மொத்துப் படவேண்டிய தில்லை. பயந்து பயந்துகொண்டு பட்டினியும் கிடக்க வேண்டிய தில்லை....

வீடு, வீடு என்று சொல்வதெல் லாம் அவனுடைய சொந்த வீடு அல்ல. அங்கே இருப்பவர்களும் அவனுக்கு என்ன உறவோ, அவ னுக்கே சரியாகத் தெரியாது. அவனுக்கு வினைத் தெரிந்த நாள் முதல் அவன் அந்த வீட்டில்தான் இருந்தான். அந்த வீட்டுக்கார னைச் சிற்றப்பா என்று எல்லாரும் சொன்னுர்கள். சிற்றப்பா என்றுல் அப்பாவோடு கூடப் பிறந்த தம்பி இல்லை. அவனு டைய தாத்தாவுக்கு இரண்டு மனைவிகள். சீனனுடைய அப்பா மூத்த மனைவியின் மகன்; சிற்றப் பன் இளைய தாரத்தின் மகன். அதனுல்தான் அவன் சீனனைக் கொடுமையெல்லாம் செய்து, படுத்தினுன். அவனைக்கூட ஒரு விதத்தில் சேர்த்துக் கொள்ளலாம். அவனுடைய மனைவி இருக்கிருளே, காளியாத்தா, அவள் படுத்தும் பாட்டைச் சொல்லவே முடியாது. அவள் வெறும் காளியல்ல; அசல் பத்ரகாளியேதான். அவளைக் கண்டாலே அந்தச் சேரி நடுங்கும். அப்புறம் சீனன் எல்லாம் எந்த மூலைக்கு!

கூவம் நதி ஓரமாக இருந்த கூரைக் குடிசைகளில் கடைசியாக இருப்பதுதான் சீனனுடைய சிற்றப்பாவுக்குச் சொந்தமானது. பூட்டு, பெட்டிகளுக்குச் சாவி போடுவது, குடை ரிப்பேர் செய் வது இதெல்லாம்தான் அவன் தொழில். சிங்கப்பூர் சின்னப் பக்கிரி என்றுல் சின்னக் குழந்தை

களுக்குக்கூடத் தெரியும். அவனுடைய கிருதா கிராப்பும், முறுக்கு மீசையும், பெரிய விழிகளும் பார்க்கவே பயங்கரமாக இருக்கும். எப்போதும் ஜெயில் கைதி மாதிரி, கட்டம் போட்ட சட்டைதான் போட்டுக்கொண்டிருப்பான். அதை நனைக்கவும் மாட்டான்; தோய்க்கவும் மாட்டான். அவன் எப்படியோ போகட்டும். அவன்தான் சீனனைக் கொண்டு போய், அந்தக் கடையில் வேலைக்கு அமர்த்தினான். அன்றாடம் சீனனுடைய சம்பளம் மூன்றணாவை அவன் கடைக்காரனிடமே வந்து வாரம் ஒரு முறை மொத்தமாக வாங்கிக்கொண்டு போய்விடுவான். அதைப் போய் வீட்டிலே மனைவியிடம் சொல்ல மாட்டான். ஏனென்றால் காளியாத்தாவிடம் அவனுக்குக் குலை நடுக்கந்தான். சேரி ஜனங்களுக்கெல்லாம் சிங்கப்பூர் சின்னப் பக்கிரியிடம் பயம். ஆனால் அவனுக்கோ அவன் மனைவி ஒருத்தியிடம்தான் பயம். அதனால் காசு வாங்கிச் செலவழித்ததைப் போய்ச் சொல்லாமல் இருந்துவிடுவான். சீனன் பாடுதான் திண்டாட்டம். உண்மையைச் சொன்னால் சிங்கப்பூர் பக்கிரி உதைப்பான்; உண்மையைச் சொல்லாவிட்டால் காளியாத்தா உதைப்பாள்; வெறும் உதையா? பட்டினி போட்டு உதைப்பாள். இந்த மாதிரிச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு சீனன் திண்டாடினான். அவனுக்கு அப்பா இல்லை; அம்மாவும் இல்லை. அவர்கள் என்ன ஆனார்களோ. அந்த உண்மையும் அவனுக்குத் தெரியாது. ஐந்து வயசிலிருந்து அவன் சின்னப் பக்கிரியிடம்தான் இருந்து வந்தான். இவ்வளவுக்கும் சீனன் ஒரு நாள்கூட வாய் திறந்து அவர்களை எதிர்த்துப் பேசமாட்டான். சோறு போட்டால் தின்பான்; இல்லாவிட்டால் வந்துவிடு



வான். எல்லாவற்றையும் விட, முக்கியமாக அடி வாங்குவதற்கென்றே அங்கே போய்விட்டு வருவதாகத்தான் தோன்றியது.

ஷங்கங் சொன்னபடி எல்லாம் சரிவர நடந்துவிட்டால் அப்புறம் என்ன கவலை? இருந்தாலும் சீனனுக்கு உள்ளூறப் பயமாகத்தான் இருந்தது. சின்னப் பக்கிரியும் காளியாத்தானும் அவன் எங்கே போனாலும் தேடி வந்து பிடித்துவிடுவார்கள். காசு பறித்துவிடுவார்கள். கொடுக்காவிட்டால் கொடுமைப்படுத்துவார்கள். ஆனால் அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும், எப்படியாவது அவர்கள் கண்ணிலே படாமல் தப்பித்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு பெரிய ஊரில் இதுகூடவா முடியாமல் போய்விடும்?

சீனன் மறுநாள் காலையில் மட்டும் வேலைக்குப் போனான். அதற்குப் பிறகு மாலையில் அவன் கடைக்காரன் கண்ணிலேயே படவில்லை. சரியாக ஐந்து மணி எப்போது ஆகும் என்று அவன் பதுங்கிப் பதுங்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். பதுங்குவதற்கு மவுண்ட் ரோடு ரவுண்டானாவில் சரியான இடம் கிடைத்திருந்தது.





பாதாளக் குளியறையில் இரண்டு மணி நேரம் காலத்தைக் கழித்தான். அவனுடைய கவனமெல்லாம் ஷங்கங் வருவதிலேயே இருந்தது. ஒரு சமயம் அவன் வராமல் போய்விட்டால் என்ன செய்வது என்று அவனுக்குக் கவலையாகவும் இருந்தது. ஆனால் குறித்த நேரம் தவறாமல் வரும் ரெயிலைப்போல, மவுண்ட் ரோடு கடிகாரத்தில் சின்ன முள் ஐந்திலும் பெரிய முள் பன்னிரண்டிலும் வந்து நின்றபோது, கையில் பிளாஸ்டிக் சாமான் தட்டுடன் டாண் என்று ஷங்கங் பஸ் நிற்கும் மேடையருகில்

தோன்றினன். அப்புறம்தான் சீனனுக்கு நல்ல மூச்சு வந்தது.

சீனனைக் கண்டதும் அவன் மிகவும் ஆதரவாகச் சிரித்தான். இருவருமாகக் கால் நடையாகவே செல்லத் தீர்மானித்தார்கள். போகும் வழியெல்லாம் சீனன் எப்படிச் சின்னப் பக்கிரியிடமிருந்து மீள்வது என்றே யோசித்துக்கொண்டு நடந்தான்.

போன வேலை உடனே முடிவாகி விட்டது. மறுநாள் முதல் அவனும் ஷங்கனைப் போல ஒரு பெரிய தட்டுக் கூடையில் சாமான்களை வைத்துக் கொண்டு சைனு பஜாரில் விற்கவேண்டும். யாராவது போலீஸ்காரனைக் கண்டாலோ இல்லையோ சட்டென்று எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டு எங்கேயாவது போய் மறையவேண்டும். இரவு எட்டு மணிக்கெல்லாம் விற்றவரையில் கணக்குப் பண்ணி, பணத்தையும் மீதிச் சாமான்களையும் கொடுத்தவனிடமே ஒப்படைத்துவிட்டுப் போய்விடவேண்டும். சீனன் எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டினன். அவனுக்கு இந்தத் தொழில் அடியோடு புதிதுதான். ஆனல் ஷங்கங் கூட இருக்கிறவரையில் அவனுக்கு என்ன கவலை? சாமான்களின் விலை அவனுக்குத் தெரியும். எப்படி அவற்றை விற்க வேண்டும் என்பதும் தெரியும். எங்கே வைத்து விற்கவேண்டும் என்பதையும் ஷங்கங் சமயத்துக்குத் தகுந்தாற்போல் சொல்லிக் கொடுப்பான். ஆகையால் சீனன் எல்லாவற்றிற்கும் மிகுந்த சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டான்.

வந்த வேலை ஆறு மணிக்கெல்லாம் முடிந்துவிடவே ஷங்கங் அவனை ஹைக்கோர்ட் பீச்சுப் பக்கம் அழைத்துக் கொண்டு போனன். போகும் வழியெல்லாம் ஜன நெரிசலாக இருந்தது. ஷங்கங் சிறிதும் கூச்சமில்லாதபடி, "ஓடியா ராஜா! எதை எடுத்தாலும் ஒன்றீணு-இரண்டிரீணு!" என்று திரும்பத்திரும்பக் கூவினன்.

பலர் வழியிலேயே அவனைக் கூப்பிட்டு விலை விசாரித்தார்கள். சிலர் ஒன்றிரண்டு சாமான்களை வாங்கவும் வாங்கினர்கள். ஒரு பையன் தடதடவென்று ஓடிவந்தான். தட்டில் இருந்த சின்ன பைனுகுலரைத் தூக்கிக்கொண்டான். கூடவே வந்த அவனுடைய தந்தையோ மாமாவோ, "அடேடே, அதெல்லாம் வேண்டாண்டா! நான் வேறே ஒசத்தியாக வாங்கித் தறேண்டா!" என்றார்.

"எனக்கு ஒசத்தியும் வாண்டாம். பொசத்தியும் வாண்டாம். இதான் வேணும்" என்று வீம்புப் பிடித்தான் அந்தச் சிறுவன்.

"ஏண்டாப்பா, இது என்ன விலை?" என்ருர் அவர்.

ஷங்கங் சிறிதும் தயங்காமல், "பதிமூன்றணு!" என்ருன்.

"பின்னே எதை எடுத்தாலும் ஒன்றீணு, இரண்டிரீணுன்னு சொன்னியே!" என்ருன் சிறுவன்.

"இம்.. இதெல்லாம் ஒன்றீணு-அதெல்லாம் இரண்டிரீணு...இது எல்லாம் அந்த வெலைக்கு வராது. பைனுகுலர் வேணுமானல் பதிமூன்றணுதான்!" என்ருன்.

சீனனுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. அந்தத் தட்டிலிருந்த இரண்டு பைனுகுலரில் ஒன்றை அவன் காலணுகூடக் குறையாமல் அந்தச் சிறுவனிடம் விற்றுவிட்டான்.

"இதன் பேரெல்லாம் நீ எப்படா தெரிஞ்சிக்கிட்டே?" என்ருன் சீனன்.

"பேரு என்னடா பேரு? ஒரு நொடியிலே தெரிஞ்சிக்கலாம். ஆனு இந்த மாதிரி செல்லம் பிடிக்கிற பையங்ககிட்டே ஆறணுச் சாமானைப் பதிமூணணுவுக்கு விக்கத் தெரியணும். அதாண்டா சாமர்த்தியம். அதைத்தான் நீ தெரிஞ்சக்கணும்!" என்ருன் ஷங்கங்.

"இது விலை ஆறணுத்தானு?"

"ஆமாண்டா - நம்பளுக்கு நாலணுவுக்குக் கிடைக்கும். அதை ஆறணுவுக்கு விக்கணும். வித்தா ரெண்டணு லாபம். அந்த ரெண்டணுவை நீ எடுத்து ஜேபியிலே போட்டுக்கலாம்!" என்ருன் ஷங்கங், எல்லாம் கரைத்துக் குடித்தவன் மாதிரி.

''அப்படி ஏமாத்தலாமாடா?''

''போடா நீ ஒருத்தன். நாம்ப என்ன திருடறோமா, பொய் சொல்றோமா, கொள்ளை யடிக்கிறோமா?''

''ஆறணுச் சாமானை ரெண்டு பங்கு வெலை சொன்னுப் பொய் இல்லியா?''

''இதுதான் பொய்யா? ஆறணுச் சாமான் நம்பகிட்டே இதுதான் விலை. இஷ்டமானு வாங்கு, கஷ்டமானு போ! ஆறணுமட்டும் நெசமா? இதெல்லாம் செய்யறதுக்கு ஒரணுகூட ஆகாது. அவன் லாபம், கடைக்காரன் லாபம், அப்புறம் விக்கிற பையன்களுடைய லாபம்—கணக்குப் போட்டுப் பாரேன், எத்தினி பேரு பொழைக்கருங்கன்னு....இதுக்கெல்லாம் பயந்தின்னு நீ என்னு வித்துக் கிளிக்கப்போறே?'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தான் ஷங்கங்.

சீனன் உடனே பயந்து, ''அதெல்லாம் இல்லே, ஷங்கா! விஷயத்தைத் தெரிஞ்சிக்கிட்டேன். எங்கே, இங்கே கொண்டா அதைப் பார்க்கலாம்!'' என்று சீனன் அந்த இன்னொரு பைனுகுலரை எடுத்து இரண்டு கண்களிலும் வைத்துக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! தூரத்தில் உள்ளவை எல்லாம் வெகு அருகில் தெரிந்தன; மின்சார ரெயில் வெகு சமீபமாக வந்து நின்றது. புறப்படுகிற சமயத்தில் ஒரு கிழவி ஏறப் போகிருள். அதோ யாரோ பிடித்து இழுத்து அவளை நிறுத்துகிருன்!

ஹைகோர்ட்டின் உச்சியிலுள்ள லைட் ஹவுஸ் விளக்கைக் கையாலேயே எட்டிப் பிடித்து விடலாம் போலிருக்கிறது! சீனன் உடனே வெறும் கண்ணுல் அதை அண்ணுந்து பார்த்தான். அவ்வளவு உயரத்திலிருக்கும் பொருள் எப்படி இவ்வளவு அருகில் தெரிகிறது! மாயக்கண்ணுடியோ, இது! இதற்குப் பதின்மூன்றணு என்ன, கையில் எவ்வளவு இருந்தாலும் கொடுக்கலாம் என்றுதான் அவனுக்குத் தோன்றியது. அதனுல் தான் ஷங்கங்கும் அப்படி இரண்டு பங்கு விலைக்கு விற்ருனே என்றும் எண்ணிக்கொண்டான்.

பிறகு அவர்கள் இருவரும் ரெயில்வே கேட்டைத் தாண்டி பீச்சுப்பக்கம் போனுர்கள். ஷங்கங், சின்னக் குழந்தைகள் இருக்கும் பக்கமாகவே சாமான்களை விலை கூறிக்கொண்டு போனுன். சீனன் பைனுகுலரில் கருநீலக் கடலையும் புரண்டு புரண்டு சுருண்டு விழும் வெண்ணலை வரிசைகளையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே வந்தான். வேர்க்கடலை, பட்டாணி விற்கும் பையன், பட்டாணிச் சுண்டல் விற்கும் கிழவர், சிப்ஸ், முந்திரிப் பருப்பு விற்கும் பாலக்காட்டுப் பையன், பிடிவாதமாகப் பிச்சை கேட்கும் ஒரு மொட்டைப் பிச்சைக்காரி, கடலை தின்னும் மனிதர்களை ஒற்றைக் கண்ணுல் வேடிக்கை பார்க்கும் காக்கைகள், காக்கைக்கு வேர்க்கடலையைப் போடாமல், கிளிஞ்சலைப் போட்டு ஏமாற்றும் மனிதர்கள், மணல் வீடு கட்டி விளையாடும் சிறுமிகள்—எல்லாரும் சீனனுக்கு வெகு அருகில் இருப்பதுபோல் தோன்றினுர்கள். முகம்தான் அதிலே அத்தனை தெளிவாகத் தெரியவில்லையே தவிர, மற்றவை எல்லாமே நன்ருகத் தெரிந்தன.

நடு நடுவில் பின்தங்கிப்போன சீனனைக் கூப்பிட்டு அழைத்துக் கொண்டே ஷங்கங் துறைமுகப் பக்கமாகப் போகத் தொடங்கினுன். அங்கே கூட்டம் அதிகமாக இல்லாததால், ''நீ இங்கேயே இரு—அந்தக் கும்பலைமட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஐந்தாறு குழந்தைகளுடன் இருந்த ஒரு சிறு கும்பலை நோக்கிப் போனுன் அவன். சீனன் மீண்டும் பைனுகுலரில் கடலையும், கரைநோக்கி ஊர்ந்து வரும் பாய்விரித்த கட்டுமரங்களையும் பார்த்துக்கொண் டிருந்தான். அப்படிப் பார்த்துக் கொண்டே துறைமுகத்தையும் துறைமுகத்தில் வந்து நிற்கும் கப்பல்களையும் கவனித்தான். துறைமுகப் பிரதேசத்தில் இருள் வந்து சூழ்ந்துவிட்டது. புகைபோல அலைச் சாரல் எழும்பி, பனிமூட்ட

மாகப் பார்வையைத் தடுத்தது. ஆயினும் துறை முகத்தின் வளைவுச் சுவர் நன்ருகத் தெரிந்தது.

சீனன் அப்படிப் பார்த்தபோது அவன் கண்களில் ஓர் அதிசயமான காட்சி தென்பட்டது. அங்கே துறை முகத்து வளைவின் மேலே யாரோ இருவர் முதலில் நடந்துபோவது போல் தெரிந்தது. பின்னர் அவர் கள் ஒருவர்மீது ஒருவர் திடீ ரென்று பாய்ந்தது தெரிந்தது. சற்றைக்கெல்லாம் சண்டை வெகு தீவிரமாக மாறிவிட்டது. சண்டை யிட்டவர்களிலே ஒருவன் கொஞ்சம் வயதானவனுகத் தோன்றினுன். மற்ருெருவன் கொஞ்சம் வாலிபனு கத் தோன்றினுன். கிழவனுக இருந்தாலும் அவன் வாலிபனைத் தடுத்து, அடிக்குப் பதிலடி, குத் துக்குப் பதில் குத்து, உதைக்கு எதிர் உதை என்று சளைக்காமல் போராடி வந்தான்.

''சீனு! வாடா போகலாம்!'' என்ருன் ஷங்கங் திரும்பி வந்து.

''அடே, அடேய், இங்கே வந்து பாரேன்..'' என்று அவனை அருகில் அழைத்தான் சீனன்.

இப்போது வாலிபனுக இருந்த வன் சளைத்துப் போகாமல் கிழவன் மீது பாய்ந்து அவன் கழுத்தை இறுகப் பிடித்து எக்கச் சக்கமாக நெரித்துக் கொண் டிருந்தான். கிழவன் கை கால் எல்லாம் ஓய்ந்து போய், அநேகமாக வாயைப் பிளந்துவிட்டான்.

சீனன் கையிலிருந்த பைனு குலரை வாங்கிப் பார்த்த ஷங்கங், ''அடேய் சீனு! கிழவன் கையில் என்னமோ ஒன்று இருக்குடா: அதனுல்தாண்டா அவனுல் திமிற முடியவில்லை!'' என்ருன்.

சீனன் பார்த்தபோது அது ஒரு சிறு நகைப் பெட்டிபோல இருந்தது. ஆனுல் இது இன்னும் சற்றுப் பெரியதாக இருந்தது. கிழவனைப் பார்த்தால் நம் ஊர்க் கிழவன் மாதிரியும் இல்லை. என்ன தான் நடக்கிறது என்று பார்த்துக் கொண் டிருக்கும் போதே, வாலிபன் கிழவனுடைய கழுத்தை ஓர் அழுத்து அழுத்தி, உடலை ஒரு புரட்டுப் புரட்டி, கட்டைச் சுவருக்குக் கீழே உள்ள சிமெண்டுப் பாறையிடுக்கில் தள்ளினுன்.

சீனனுக்கு இந்தக் காட்சியைப் பார்க்கும் போதே விழி பிதுங் கியது. கிழவன் விழுந்தது தண் ணீர்ப் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தான் தெரியுமே யொழிய, துறை முகத்திலுள்ளவர்களால் பார்த் திருக்க முடியாது.

அந்தக் காட்சியை ஷங்கங்கும் பார்த்தான். கிழவன் பாதை யிடுக்கில் விழுந்த பிறகும் பெட் டியை விடவில்லை என்பது தெரிந் தது. வாலிபன் உண்மையில் பயந்து போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கீழே குதித்துப் பெட்டியை எடுக்க முயன்றிருக்க மாட்டானு? கிழவன் உயிர் இருக் கிறதா, இல்லையா என்றுகூட அவன் பார்க்கவில்லை. அப்படியே உயிர் இருந்தாலும் அந்த இடத் தில் இன்னும் ஒரு மணி நேரம் கவனிப்பாரற்றுக் கிடந்தால் உயிர் நில்லாது என்று அவனுக்குத் தெரிந்திருக்கும். ஆனுல் அங்கே நின்றிருந்தால் அவனல்லவா உயி ரோடு மாட்டிக்கொள்ள வேண்டி யிருக்கும்? அதனுல் சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, வளை விலேயே ஓடினுன். அதைக் கொஞ்ச தூரம் வரையில்தான் பார்க்க முடிந்தது. அப்புறம் திடீரென்று அவன் தலை மறைந்துவிட்டது. மனிதர்கள் ஏமாறுவதெல்லாம் இப்படித்தான்!

இதையெல்லாம் யாரும் கவனித் திருக்க மாட்டார்கள் என்றுதான் அவன் எண்ணியிருப்பான். ஆனுல் இரண்டு சிறுவர்கள் கையிலே பைனுகுலரோடு ஒன்று விடாமல் பார்த்திருப்பார்கள் என்பதை அவன் எங்கே கண்டான்?

இப்பொழுது சீனனுக்கும் ஷங்க னுக்கும் யோசனையாகப் போய் விட்டது. நேரமோ கிழக்கே சந்தி ரோதயம் ஆகப்போகிற சமயம்.

இருந்தாலும் இருவரும் ஒரு முகமாக, துறைமுகத்துக்கு ஓடிச் சென்று, முடிந்தால் கிழவனைக் காப்பாற்றுவது; இல்லையானுல் அதிகாரிகளிடமாவது சொல்வது என்று புறப்பட்டார்கள்.

(தொடரும்)

# ஏமாந்தவன் யார்?

**தே. பார்த்தசாரதி**

கருமி கண்ணுயிரம் தன் எதிரில் இருந்த ஆசாமியை ஏற இறங்கப் பார்த்தார். அவர் சொன்னதைக் கண்ணுயிரத்தினுல் நம்பவே முடியவில்லை.

'என்னங்க, என்னுடைய காருக்கா ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறேன் என்கிறீர்கள்? இதோ, இந்தக் காருக்கா?'' என்று திருப்பித் திருப்பிக் கேட்டார்.



கண்ணுயிரத்துக்கு எதிரில் இருந்தவர், ''ஆமாங்க. இந்தக் காருக்கேதான். இன்னொரு சமயமானு அவ்வளவுகூடக் கொடுக்க மாட்டேங்க. ஆனு பாருங்க, இப்போ சமயம் அட்படி இருக்குது'' என்ருர்.

''நீங்க சொல்றதைக் கேட்க எனக்கு ஒரே ஆச்சரியமான்னு இருக்கு. இதற்கு முன்னடி நூறு ரூபாய்க்குக்கூட இந்தக் காரை வாங்கிக்க மாட்டேன்னு அநேகம் பேர் சொல்லிட்டாங்க: நீங்க என்னடான்னு இந்தக் காருக்கு முழுசா ஐந்நூறு ரூபாய் தருகிறேன் என்கிறீர்களே!'' என்ருர் கண்ணுயிரம் தலையை ஆட்டி.

''அட, காரணம் வேறு ஒண்ணும் இல்லீங்க. எனக்கு என்னமோ உங்க கார் நல்ல அதிருஷ்டக் கார் என்று தோணுது. அவ்வளவுதான் விஷயம்; அதை வாங்கி மேலே பத்தோ இருபதோ தள்ளி ரிப்பேர் செய்தால் கார். ஏ ஒன்னு ஆகிவிடுங்க'' என்ருர் அந்த ஆசாமி.

''இதை இனிமே 'ரிப்பேர்' கூடச் செய்ய முடியுமா?'' என்ருர் கண்ணுயிரம்.

அவரிடம் மிகவும் பழைய கார் ஒன்று இருந்தது. அது எத்தனை நூற்ருண்டுகளுக்கு முன்னே தோன்றியது என்று அவருக்கே தெரியாது. அவருடைய பாட்டனுருக்குப் பாட்டனுருடைய காலத்திலிருந்தே அந்தக் கார் வீட்டில் இருந்தது. கண்ணுயிரம் கருமியாதலால் அந்தக் காரைச் செப்பனிடப் பணம் செலவழிக்க அவர் மனம் ஒப்பவில்லை. அதை யாரிடமாவது விற்று விடலாம் என்றுகூட அவர் முயற்சி செய்தார். ஆனுல், அந்தக் காரை விற்பனைக்கு வந்து பார்த்த அனைவரும், 'இந்தக் காரையும் கொடுத்து. அதற்கு மேலே பத்து ரூபாயையும் கையிலே கொடுத்தால்கூட இது நமக்கு வேண்டாம்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்கள். இந்த நிலையிலேயே அந்தப் பழைய கார் பழுது பார்க்கப்படாமல் 'ஷெட்'டிலேயே அடைந்து கிடந்தது.

ஒரு நாள் ஓர் ஆசாமி கண்ணுயிரத்திடம் வந்து. ''நீங்கள் ஒரு பழைய கார் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு உங்களைப் பார்க்க வந்தேன். காருக்கு என்ன விலை சொன்னுலும் நான் வாங்கிக் கொள்கிறேன். ஷெட்டைத் திறந்து காரைக் காட்டுங்க'' என்ருர்.

கண்ணுயிரம் அலுப்புடன், ''இதென்ன ஐயா பேஜாராப்

போச்சு. இப்போ அப்படித்தான் சொல்வீங்க. காரைப் பார்த்ததும் காத தூரம் ஓடிப் போயிடுவீங்க... உங்களைப் போல எவ்வளவோ பேர் வந்து பார்த்தாச்சு!'' என்றார்.

''அப்படி இல்லீங்க. நான் தான் எவ்வளவு விலையானாலும் வாங்கிக் கொள்கிறேன் என்கிறேனுங்களே! இன்னுமா உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை?'' என்று வற்புறுத்தினார்.

அவருடைய வற்புறுத்தலைத் தாங்க மாட்டாமல் 'கார் ஷெட்' டைத் திறந்து காரை அவருக்குக் காட்டச் சொல்லி உத்தர விட்டார் கண்ணாயிரம்.

வந்த மனிதர் அந்தக் காரைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்தார். ''இதே கார் தான் எனக்கு வேண்டியது'' என்று அவர் மகிழ்ச்சியுடன் சொன்னபோது கண்ணாயிரத்துக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த ஆசாமிக்குப் பைத்தியமோ என்று கூடத் திகைத்தார்.

அதற்குள் அந்த ஆசாமி, ''சரி, காரின் விலையைப் பேசலாம்'' என்று கூறியதும் கருமி கண்ணாயிரம் சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்று எண்ணித் தைரியமாக, ''இதன் விலை 500 ரூபாயுங்க'' என்று ஒரு போடு போட்டார். அதைக் கேட்டு அந்த ஆசாமி மூர்ச்சையடைந்து விடுவார் என்று கண்ணாயிரம் நினைத்தபோது அவர், ''சரிங்க....இந்தாங்க, 500 ரூபாய்'' என்று அப்பொழுதே பணத்தை எண்ணிக் கொடுத்து விட்டார். அதன் பிறகுதான் ஆரம்பத்தில் கண்டபடி இருவருக்கும் சம்பாஷணை நடந்தது.

கடைசியில் கார் இனி அந்த மனிதரைச் சேர்ந்தது என்று முடிவாயிற்று. ரூபாயை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து, திருப்தியடைந்ததும் கண்ணாயிரம் தன்னுடைய ஆளையே விட்டு அந்தக் காரை அவர் வீட்டுக்குத் தள்ளிக் கொண்டுபோய் விட்டு விடும்படி உத்தரவிட்டார். அந்த ஆசாமியைப் பார்த்து, ''இதோ பாருங்க. இனிமேல் இதில் 'ரிப்பேர்' 'கிப்பேர்' என்று என்னிடம் கொண்டு வரக்கூடாது. இந்தக் காருக்கும் எனக்கும் இனி ஸ்நான ப்ராப்திகூடக் கிடையாது'' என்றார். அந்த ஆசாமியும் ''ரொம்ப சரிங்க'' என்று தலையை ஆட்டிவிட்டுப் போய் விட்டார்.

இப்படியும் ஏமாந்து போகும் ஓர் அப்பாவி இந்த உலகத்தில் இருப்பானா என்று எண்ணிக் கண்ணாயிரம் தன்னையே பாராட்டிக் கொண்டிருந்த போது அவருடைய மகன் கையில் தினசரியுடன் அங்கே வந்தான்.

''அப்பா, நமக்கு ஒரு சந்தோஷச் செய்தி. இதோ இதைப் பாருங்க'' என்று கூறியபடியே அந்தத் தினசரியில் மூலையில் இருந்த ஒரு விளம்பரத்தைக் காட்டினான்.

கண்ணாயிரம் மகிழ்ச்சியுடன் அதைப் படித்தார்:

''ரூ. 1000 பரிசு!

சமீபத்தில் சென்னை நகரில் ஒரு மோட்டார்க் கண்காட்சி நடக்கவிருக்கிறது. அது சமயம் மிக மிகப் பழமையான ஒரு மோட்டார்க்காரைக் கொண்டு வருபவருக்கு ரூ. 1000 பரிசு தருகிறோம். தற்போது உபயோகத்தில் இல்லாத, பல ஆண்டுகளுக்கு முற்பட்ட மோட்டார் காராக இருக்க வேண்டும்.

மோட்டார் கண்காட்சிக் காரியதரிசி.''

இந்த விளம்பரத்தைப் படித்ததும் கண்ணாயிரம் ஏன் மயக்கமாக விழுந்துவிட்டார் என்று அவர் மகனுக்குப் புரியவில்லை. இந்த விளம்பரத்தைப் படித்துவிட்டு ஓர் ஆசாமி ஏற்கனவே அவர்கள் வீட்டுக் காரை வாங்கிக்கொண்டு போய்விட்டார் என்ற சேதி அவனுக்கு எப்படித் தெரியும்?

# ஜெயிலில்!

**எஸ். ராமகிருஷ்ணன்**

வெகு சுவாரஸ்யமாகப் பம்பரம் விளையாடிக்கொண்டிருந்த சங்கர், தன்னை யாரோ கூப்பிடுவதைக் கேட்டதும், தலையை நிமிர்த்தி, வீட்டுப் பக்கம் நோக்கினான். அங்கே அவனுடைய பாட்டி நின்றுகொண்டிருந்தாள்.

ஆட்டத்திற்கு இடையூறு ஏற்பட்டதால்—சங்கருக்கு எல்லையில்லாக் கோபம். ''என்ன, பாட்டி?'' என்றான் அங்கிருந்தபடியே.

''இங்கே வாயேன், சொல்கிறேன்'' என்றாள் பாட்டி.

''கோவிலுக்குத் தானே? நான் வரவில்லை. நீ போ'' என்று தொண்டை கிழியக் கத்தினான்.

''தொண்டையைப் பார், தொண்டையை! எல்லாம் பம்பரம் செய்யற வேலை! ஏய், கோவிலுக்கு இல்லைடா; வேறு ஒன்று. முக்கியமான செய்தி, கேட்டுவிட்டுப் போ'' என்றாள் பாட்டி.

''எதுவாயிருந்தாலும் இப்போ வரமுடியாது. ஏன் பாட்டி, நாளையிலிருந்துதான் கோடை லீவு; பள்ளிக்கூடம் கிடையாதே - சாவகாசமா வாங்கக்கூடாதா?'' என்றான். பாட்டி கோயிலுக்கு இல்லை என்றதும் - கடைக்குப் போய் சில்லறைச் சாமான்கள் வாங்கத்தான் தன்னைக் கூப்பிடுவதாக எண்ணிக் கொண்டான்.

''கடைக்கும் போக வேண்டாம், கண்ணிக்கும் போகவேண்டாம். உன் அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கு, வரயா, இல்லையா?'' என்றாள்.

அவ்வளவுதான். இவ்வளவு நேரம் பிடிவாதம் செய்த சங்கர், ''நான் போறேண்டா'' என்று கத்திக் கொண்டே பாட்டியை நோக்கி ஓடி வந்தான்.

''பாட்டி, அப்பா என்ன எழுதியிருக்கார்?''

''உன்னைச் சதா - பம்பரம் விளையாடச் சொல்லி எழுதியிருக்கிறான்'' என்றாள்.

''போ பாட்டி; பொய். சொல்ல



மாட்டியா?'' என்று சிணுங்கினன் சங்கர்.

பேரனை அதற்குமேல் சஞ்சலப் படுத்த விரும்பாத அவள், ''உன்னை லீவுக்கு ஊருக்கு வரச்சொல்லி எழுதியிருக்கிருன்'' என்ருள்.

இதைக் கேட்டதும் சங்கருக்கு எல்லையில்லாச் சந்தோஷம். கடந்த சில நாட்களாகவே அவன் இந்தக் கடிதத்தை எதிர்பார்த்து ஆவ லோடு காத்திருந்தான்.

''எப்போ பாட்டி, போகணும்?''

''நாளைக்கு..''

''ஏன், ராத்திரியே போனல் என்னவாம்?'' என்ருன் ஆவல் மிகுந்தவனுக.

பேரனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமலேயே உள்ளே போய் விட்டாள் பாட்டி. உடனே தன் நண்பர்களிடம் இந்தச் சந்தோஷச் சமாசாரத்தைத் தெரிவிக்க ஓடி ஞன் சங்கர்.

சங்கர் அன்று இரவு முழுவதும் தூங்கவே இல்லை. தப்பு.. தப்பு.. அவன் எவ்வளவோ முயன்றும் தூக்கம் அவனை நெருங்கவில்லை. நூறு மைல்களுக்கப்பாலிருக்கும் தன் பெற்ருேர்களையும் - உடன் பிறந்தவர்களையும் பற்றி எண்ணிக் கொண்டே படுத்திருந்தான். அப்பாவைப் புதிதாகப் 'பேண்ட்' தைத்துக் கொடுக்கும்படி கேட்க வேண்டும். அண்ணுவிடமிருந்து படங்கள் நிறையப் போட்ட கதைப் புத்தகங்கள் வாங்கிவர வேண்டும். அக்கா போன தடவை போயிருந்தபோது நூலால் பின் னப்பட்ட பனியன் போட்டுத் தருவதாகச் சொன்னுள். அதை யும் ஞாபகமாகக் கேட்டு வாங்க வேண்டும். இப்படித் தன் சிந் தனையை ஓடவிட்டுக் கொண்டு படுத்திருந்த சங்கர் அவனையும் அறியாமல் தூங்கிவிட்டான்.

சங்கரின் தகப்பனுர் ஒரு டாக் டர். அவர் திருச்சியில் சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தார். சங்கர் தன் தாத்தா விடம் கிராமத்தில் தங்கியிருந்து படித்துக்கொண் டிருந்தான். சங் கரின் தகப்பனுர் மிகவும் நல்லவர், கோபம் வராமலிருந்தால்! அப்படி வந்தாலோ லேசில் போகாது.

சங்கரிடம் அவன் தகப்பனுருக்குக் கொள்ளை ஆசை. அவர் தம் குழந்தைகள் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லாது வாங் கிக் கொடுக்கும் குணமுள்ளவர். சங்கர் விஷயத்தில் அவர் போக்குத் தனி. இவன் ஒரு சட்டை கேட் டால் அவர் இரண்டு வாங்கிக் கொடுப்பார். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும். ''சாமி - ஆண்டவனே இன்னிக்கு அப்பா




வுக்குக் கோபம் வராமலிருக்கணும்: அப்போதான் என் முதுகு பிழைக் கும்'' என வேண்டிக்கொள்வான் சங்கர்.

பொழுது விடிந்தது. சங்கர் படுக்கையைவிட்டு எழுந்தான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பூலோக அமிர்தத்தை (காபி) அருந்திவிட்டு மூட்டை கட்டத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டான். நல்ல சட்டை

ஒன்றும் டிராயர் ஒன்றும் மற்ற தெல்லாம் பழைய துணிகளாகவும் எடுத்து வைத்துக்கொண்டான். அவைகளைப் பார்த்துத் தன் தந்தை நிறைய டிராயரும், சட்டையும் தைத்துக் கொடுப்பார் என்பது அவன் எண்ணம்.

பாட்டியும் பேரனும் கிளம்பினர் கள். தாத்தாவிடம் விடை பெற்றுக்கொண்டான் செல்லப் பேரன். ரெயிலடியை அடைந்து, வண்டியில்



ஏறி, ஜன்னலுக்குப் பக்கத்தில் தனக்கு இடம் தேடிப் பிடித்து அமர்ந்தான்.

சங்கரின் மனத்திலே இனந் தெரியாத ஒரு மகிழ்ச்சி. விடுமுறை நாட்களில் அம்மாவோடு இருப்போம். ஒவ்வொரு நாளும் விதவிதமான தின்பண்டங்கள் செய்து கொடுப்பாள் என்றெல்லாம் அவன் எண்ணம் ஓடியது. எத்தனை நேரந்தான் அந்த இளம் உள்ளத்தால் கற்பனை உலகத்தில் சிறகடித்துப் பறக்க முடியும்! எப்போதடா திருச்சி ஜங்ஷன் வரும் என்ற ஆவலோடு காத்திருந்தான்.

"ஏன் பாட்டி, இன்னும் எவ்வளவு ஸ்டேஷன் இருக்கு? ஸ்டேஷனுக்கு அப்பா வந்திருப்பாரா; அல்லது அண்ணு வந்திருப்பானு? யாரும் வரலேன்னு உனக்குத் தனியாக வீட்டுக்குப் போகத் தெரியுமோ?" என்று கேட்டு, பாட்டியின் பொறுமையைச் சோதித்தான்.

'ஏன் இந்த ரெயில் இவ்வளவு மெதுவாகப் போகிறது? வேகமாகப் போனல் என்னவாம்? ரெயிலெல்லாம் ஏரோப்ளேன் மாதிரி வேகமாகப் போக வேண்டும்' என எண்ணினன். நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. ரெயிலும் ஓடி ஓடி கடைசியில் திருச்சி ஜங்ஷனை அடைந்தது.

சங்கர் ஆவலோடு தன் கண்களை பிளாட்பாரத்தில் செலுத்தி சுற்றுமுற்றும் பார்த்தான். அப்பாவையோ அண்ணுவையோ காணவில்லை. பாவம், என்ன ஏமாற்றம்! "பாட்டி, யாரையும் காணேம்" என்ருன். அந்தக் குரலில்தான் எவ்வளவு ஏக்கம்! ஏமாற்றம்.

பாட்டியும் பேரனும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள். குதிரை வண்டியொன்றை ஏற்பாடு செய்து, சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு ஓட்டச் சொன்னுள் பாட்டி.

சங்கரின் தகப்பனருக்கு, அவர்கள் இன்று வருவார்கள் என்பது தெரியாது. அவர் லீவு விட்டவுடன் கிளம்பி வருமாறு கடிதம் எழுதியிருந்தார். அவ்வளவுதான். இவர்களும் தாம் வரும் ரெயிலைக் குறித்துக் கடிதம் போடாததால் யாரும் ஸ்டேஷனுக்கு வரவில்லை.

வண்டி ஆஸ்பத்திரியை அடைந்தது. மகன் வசிக்கும் வீட்டு வாயிலை அடைந்ததும் வண்டியை நிறுத்தச் சொன்னுள். வண்டியை விட்டு இறங்கி, பேரனேடு உள்ளே சென்ற அவள் எல்லாம் புதியதாகவும் கேட்பாரில்லாமல் மூலைக்கு மூலை சாமான்கள் கிடப்பதையும் கண்டு திகைத்தாள்.

## சிறுவர் நிகழ்ச்சி



குறிப்பெடுத்துக் கொள்கிருள் சிறுமி.
புகைப்படம்: முரசு.

சங்கரன் விழித்தான். அப்போது உள்ளேயிருந்து புதிய மனிதர் ஒருவர் வந்தார்.

"யாரம்மா நீங்கள்? என்ன வேண்டும்?" என்ருர்.

"இங்கே சீனிவாசன்னு ஒரு டாக்டர் இருந்தாரே.." என இழுத்தாள் பாட்டி.

"ஓ..அவரா..அவருக்கு நீங்கள் என்னவாக வேண்டும்?" என்ருர் அந்தப் புதிய மனிதர்.

"அவர் என் மகன்."

"அப்படியா! ரொம்பச் சந்தோஷம். அவர் ஜெயில்லே இருக்கார்" என்ருர் அவர்.

"என்ன ஜெயில்லியா..எத்தனை நாளா?" என்ருள் பாட்டி ஈனஸ்வரத்தில்.

"இரண்டு நாட்கள்தான் ஆச்சு. அங்கே போய்ப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டார் அவர். வெளியே விசாரித்ததில் டாக்டர் சீனிவாசனுக்குப் பதிலாகத்தான் அந்தப் புதிய மனிதர் டாக்டராக வந்திருப்பதாகவும் தெரியவந்தது.

பாட்டிக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. தன் மகன் என்ன குற்றம் செய்தான்? பிறர் பொருளுக்கு ஆசைப்படமாட்டானே என்றெல்லாம் எண்ணிக் கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

"வாங்கம்மா, நாம் அங்கேயே போய்ப் பார்க்கலாம்" என்ருன் வண்டிக்காரன்.

ஏதோ மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவள் போல் சென்று வண்டியில் ஏறிஞள். 'அவன்தான் ஜெயிலுக்குப் போனுன். என் மருமகள், பேரன், பேத்திகளின் கதி என்ன வாயிற்று?' என எண்ணிஞள். அவளுக்கு அவர் ஒரே ஒரு புத்திரன்—செல்லப்பிள்ளை. அவள் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

எல்லாவற்றையும் கண்ட சங்கர் ஊமையாஞன். அவனையும் அறியாமல் அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. சிறையைப் பற்றிப் புத்தகங்களில் படித்திருக்கிருன். அங்கே திருடர்களும், கொலைகாரர்களுந்தான் இருப்பார்கள். அவர்களைக் கல் உடைக்கச் சொல்வார்கள். செக்கிழுக்கச் சொல்வார்கள் என்றெல்லாம் அதில் படித்திருக்கிருன். நம் அப்பாவும் அவைகளையெல்லாம் செய்ய நேருமோ என எண்ணியது அவன் பிஞ்சு உள்ளம். கவலையோடு தன் பாட்டியின் முகத்தைப் பார்த்தான். அவள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக இருந்தாள்.

வண்டி குறிப்பிட்ட இடத்தை அடைந்தது. தள்ளாடியவாறே பாட்டி கீழே இறங்கிஞள். அப்போது சங்கரின் தகப்பஞர் டிப்டாப்பாக டிரஸ் செய்துகொண்டு, ஒரு வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டாள். மகனைக் கண்ட தாய் வேகமாக ஓடி அவரைக் கட்டிக்கொண்டு 'கோ' வென அழ ஆரம்பித்துவிட்டாள்.



ஆட்டுக்குட்டி எங்கே?
**புகைப்படம்: புஷ்பத்துறை சுப்ரமண்யம்.**

தன் தாய் ஏதும் கூருமல் அழுவதைக் கண்ட அவர், ஊரில் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டதோ என எண்ணினுர். சங்கர் ஓடோடியும் வந்து தன் தந்தையின் கையைப் பற்றிக் கொண்டு கூடவே அழ ஆரம்பித்துவிட்டான். வண்டிக்காரன் விவரம் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

அழுகைக் குரல் கேட்டதும் சங்கரின்-தாய் - சகோதரன் - சகோதரி எல்லோரும் வெளியில் வந்து விஷயம் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்கள்.

பலமுறை சங்கரின் தகப்பனுர் தன் தாயாரை வற்புறுத்திக் கேட்ட பின்னர்—"நீ என்னடா தப்பு செய்தே? யாரையாவது மோசம் செய்து விட்டாயா? நான் நம்ப மாட்டேன். என் மகன் அப்படிப்பட்டவன் அல்ல. ஏன்டா உனக்கு இந்தத் தலைவிதி?" என்ருள்.

"என்னம்மா, நீ என்ன சொல்றே? விவரமாகத்தான் சொல்லேன்" என்ருர் டாக்டர்.

"நீ ஜெயில்லே இருக்கேன்னு அந்த டாக்டர் சொன்னுரே, எந்தப் பாவியடா உனக்கு இந்தத் தீம்பு செஞ்சது?" என்ருள்.

இதைக் கேட்டதும். சங்கரின் தகப்பனுர், தாயார், மற்றவர்கள் எல்லோரும் கொல்லெனச் சிரித்தார்கள். அவர்களால் எவ்வளவு முயன்றும் சிரிப்பை அடக்க முடியவில்லை. விஷயம் புரியாமல் பாட்டியும் பேரனும் திகைத்தார்கள்.

"இதற்காகவா இப்படி அழுதாய்?" என்ருர்.

"பெத்த மனம் பித்து. பிள்ளை மனம் கல்லு" என்ருள் பாட்டி.

"அந்த டாக்டர் அப்படியா சொன்னுர்?" என்ருர்.

"அப்படியானுல் அவர் சொன்னது பொய்யா..அவன் நாச.."

"இரு..இரு..அவர் சொன்னது உண்மைதான்" என்ருர்.

"என்ன! உண்மையா? அப்படியானுல் நீ குற்றவாளியா? என்ன குற்றம் செய்தே?" என்ருள் பாட்டி.

"அம்மா நானிருப்பது ஜெயில்லேதான். ஆனுல் கைதியா இல்லே. டாக்டராக. இரண்டு தினங்களுக்கு முன்புதான் திடீர்னு ஆர்டர் வந்தது. உனக்கு அவசரத்தில் கடிதாசு எழுதியதால் அதை எழுத மறந்து விட்டேன்" என்ருர்.

"சொல்றவன் சரியாகச் சொல்லக் கூடாதோ? படிச்ச லட்சணம், என்னைச் சித்திரவதை செய்து விட்டானே.." என்ருள் பெருமூச்சுடன்.

சங்கர் துள்ளல் நடையுடன் உள்ளே ஓடினுன். அவன் அப்பா டாக்டராகத்தான் இருக்கிருர். அவன் விரும்பியது யாவும் கிடைக்கும்.



# அடுத்த வீட்டு மாமா

ஜோதிர்லதா கிரிஜா

கிட்டப்பாவின் தங்கை ஜயம்மா வாசலில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். தெரு முனையில் 'ஜல்ஜல்' என்ற சதங்கை ஒலி கேட்கத் தொடங்கியதும் அவள் பார்வை தானாக அந்தப் பக்கம் திரும்பிற்று. ஒரு பெரிய குதிரைவண்டி அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்று, பூட்டிக் கிடந்த அடுத்த வீட்டு வாசலில் 'டக்' கென்று நின்றது.

உடனே ஜயம்மா விழுந்தடித்துக்கொண்டு தன் அண்ணனைக் கூப்பிடுவதற்காக வீட்டுக்குள் ஓடினாள். ''கிட்டப்பா! சீக்கிரம் ஓடி வாயேன். அடுத்த வீட்டுக்கு யாரோ குடி வருகிறார்கள் போலிருக்கிறது. குதிரை வண்டி வந்திருக்கிறது'' என்றான் சட்டையைப் பாதி துவைத்துக்கொண்டிருந்த கிட்டப்பா அதை அப்படியே கல்லில் போட்டுவிட்டு, சிட்டாய்ப் பறந்து வந்து குதிரை வண்டிப் பக்கத்தில் ஆஜரானான்.

அவன் எதை எதிர்பார்த்து அவ்வளவு அவசரமாக ஓடிவந்தானோ அதில் அவனுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. தன் வயதுப் பையன் யாரும் குதிரை வண்டியிலிருந்து இறங்காததைக் கண்டதும் அவன் உள்ளத்தில் இருள் சூழ்ந்தது. எனினும் வேடிக்கை பார்ப்பதற்காக அப்படியே நின்றான். ''ஒருவேளை மாமா மட்டுமே இப்போது வருகிறார்போலிருக்கிறது. மாமியும் குழந்தைகளும் ஒருகால் அப்புறம் வந்து சேரலாமல்லவா?''

குதிரை வண்டியிலிருந்து இறங்கியிருந்த மனிதரிடம் வண்டிக்காரன் வண்டிக்குள் இருந்த இரு பெரிய பெட்டிகளையும் ஒரு ஹோல்டாலை

யும் எடுத்துக் கொடுத்தான். வண்டிச் சத்தத்துக்காக அந்த மனிதர் வண்டிக்காரனிடம் ஒரு ரூபாய்த் தாளை நீட்டினர். வண்டிக்காரன் மீதிச் சில்லறை தருவதற்காகத் தன் மடியிலிருந்த சுறுக்குப் பையைத் துழாவினன். ''சாமி! சில்லறைக் காசு இல்லையே. வண்டி இங்கேயே இருக்கட்டும். நான் போய் மாற்றிக் கொண்டு வருகிறேன்'' என்றபடியே தொப்பென்று வண்டியினின்றும் கீழே குதித்தான் அவன்.

இரண்டு பெட்டிகளையும் அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு நின்ற அந்த மனிதர், ''நாலணுத் தானே அதிகப்படியாகக் கொடுத்திருக்கிறேன், பரவாயில்லை. நீயே வைத்துக்கொள்!'' என்று சொல்லி விட்டு உள்ளே நடந்தார். குதிரை வண்டிக்காரன் அந்த விசித்திரப் பேர்வழியை விழி பிதுங்கப் பார்த்து ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு 'ஜல்ஜல்' என்று நகர்ந்தான். வாசலில் ஹோல்டால் போட்டபடியே கிடந்தது. இரண்டு கைகளிலும் இரு பெட்டிகளைச் சுமந்தவண்ணம் அப்போது தான் வாசல் படியில் கால் வைத்திருந்த அந்த மனிதரை நோக்கி, ''மாமா! நான் ஹோல்டாலைக் கொண்டு வரட்டுமா?'' என்று தயங்கிய குரலில் கேட்டான் கிட்டப்பா. கழுத்தைத் திருப்பிப் பின்புறம் நோக்கிய அவர், அவனை ஏற்கனவே தெரிந்தவர்போல், ''அடுத்த வீட்டுக் கிட்டப்பாவா? தூக்க முடியுமானல் தூக்கிக் கொண்டு வாயேன்!'' என்ருர்.

கிட்டப்பா ஆச்சரியத்துடன், ஹோல்டாலைத் தூக்கியபடி, அவரைப் பின் தொடர்ந்தான். பூட்டியிருந்த கதவுகளையெல்லாம் அவர் ஒவ்வொன்ருகத் திறந்தபடி உள்ளே புகுந்தார். அந்த வீடு இரண்டு நாட்களுக்கு முன்புதான் காலி செய்யப்பட் டிருந்ததால் அதில் தூசி தும்புகள் அதிகம் இல்லை.

''நல்ல வேளை! எங்கே வந்ததும் வராததுமாக வீட்டைத் துப்புரவாக்கும் வேலையில் முனைய நேருமோ என்று பயந்துகொண்டு வந்தேன். தூசி ஒன்றும் காணேம்!'' என்று சொல்லிக் கொண்டே அவர் பெட்டிகளைக் கீழே வைத்தார்.

''முந்தாநாள்தான் மாமா இந்த வீடு காலியாயிற்று. அதனுல்தான் தூசி தும்பு ஒன்றும் இல்லை; ஆமாம், என் பேர் கிட்டப்பா என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' வாய்விட்டுச் சிரித்த அவர், ''பூ! இது ஒரு பிரமாதமா? உன் தங்கை உன்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டதையும், உடனே தலை தெறிக்க நீ ஓடிவந்து நின்றதையும் நான் பார்க்கவில்லையா என்ன?'' என்று பதிலளித்தார். ''உங்கள் வீட்டு மாமி, குழந்தைகள் எல்லோரையும் எப்போது அழைத்துக் கொண்டுவருவீர்கள்?''

''இன்னும் எனக்குக் கல்யாண மாகவில்லை.''

''இன்னும் கல்யாணமே ஆக வில்லையா?''

''ஏண்டாப்பா இவ்வளவு அக்கறையோடு விசாரிக்கிருய்? கல்யாணமாகாத அக்கா யாராவது உண்டா என்ன உனக்கு?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்த அவர், ''அடுத்த வீட்டு மாமா இப்படிக் கேட்டார் என்று வீட்டில் போய்ச் சொல்லாதே'' என்று தன் சட்டைப் பையிலிருந்து நாலு சாக்லெட்டுகளை எடுத்து அவன் கையில் திணித்தார்.

''எனக்கு அக்கா-கிக்கா கிடையாது, மாமா. நான்தான் முதல் பையன். என்னேடு விளையாட உங்கள் வீட்டில் யாராவது இருக்கிருர்களா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன்'' என்ருன் அவன்.

''அதற்காக வருந்தாதே. நீ எப்போது வந்தாலும் நான் விளையாடுகிறேன் உன்னேடு.'' கிட்டப்பா குதித்துக் கொண்டு வீட்டுக்குப் போனுன். ஜயம்மாவுக்கு இரண்டு சாக்லெட்டுகளைக் கொடுத்துவிட்டு, கிட்டப்பா அடுத்த வீட்டு மாமாவின் உதார குணத்தைக் கண், காது, மூக்கு வைத்து அவளுக்கு விவரித்தான்.

அன்று சாயந்தரம் அவன் அடுத்த வீட்டுக்குத் தன் தங்கையையும் கூட்டிக் கொண்டு போனான். மாமா அவர்களை அன்புடன் வரவேற்றார். கொஞ்ச நேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு கிட்டப்பா, "உங்களுக்கு என்ன வேலை மாமா?" என்று விசாரித்தான். மாமா சிரித்துக்கொண்டே, "வேலை ஒன்றும் பிரமாத வேலையில்லை. இரவில்தான் என் வேலை அநேகமாக நடக்கும். பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகளெல்லாம் என்னைக் கண்டு நடுங்குவார்கள். அப்படிப்பட்ட உத்தியோகம்!" என்று பதில் சொன்னதும் கிட்டப்பாவின் புருவம் நெரிந்தது. அவன் 'திரு திரு'வென்று விழித்தான். அவன் உடம்பு சில்லிட்டுப் போயிற்று. அவர் நேரடியாகப் பதில் கூறாமல், சுற்றி வளைத்துக் கொண்டு, 'போலீஸ்காரர்களுக்கெல்லாம் என்னைக் கண்டால் நடுக்கம்' என்று சொன்னவுடன் அவன் திடுக்கிட்டுப் போனான். 'சீ! இந்த மாமா உண்மையில் பெரிய பக்காத் திருடன்தான்! சந்தேகமே இல்லை. நிறைய கொள்ளையடித்திருக்கிறான். இல்லாவிட்டால் ஜட்கா வண்டிக்காரனுக்கு அநாயாசமாக நாலணாவை அதிகப்படியாய்த் தூக்கிக் கொடுக்க மனசு வருமா?'

கிட்டப்பாவின் எண்ணங்களை உணர்ந்தவர்போல மாமா, "உங்கள் வீட்டுக்குக்கூட ஒரு நாள் வருகிறேன்" என்று நமட்டுப் புன்னகை தெறிக்கக் கூறினார். கை கால்கள் உதற, கிட்டப்பா தங்கையின் கையைப் பற்றியபடி எழுந்து நின்றான். "போய்விட்டு வருகிறேன், மாமா!" என்று தடுமாறும் குரலில் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். வாசல்படியிலிருந்து கீழே இறங்கும்போது அந்தத் திருடன் இடி இடியென்று நகைத்த சத்தம் அவன் காதுகளில் நாராசமாய் நுழைந்தது. ஜயம்மா ஒன்றும் புரியாமல், "ஏதுக்கு அந்த மாமா தனக்குத் தானே சிரிக்கிறார், அண்ணா?" என்று கேட்டாள். "பைத்தியம் போலிருக்கிறது" என்று கிட்டப்பா சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டுச் சிந்தனையில் மூழ்கினான்.

மறுநாள் காலை அவன் தன் வீட்டு ஜன்னல் வழியாக அடுத்த வீட்டுப் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தான். ஜயம்மா அவன் பக்கத்தில் வந்து நின்று, "அண்ணா! அடுத்த வீட்டுக்குப் போகலாமா?" என்றாள். திரும்பிப் பார்த்த கிட்டப்பா, "இனிமேல் அடுத்த வீட்டுக்குப் போக வேண்டாம். நான் இல்லாத சமயம், சாக்லெட் தருகிறாரே என்று, நீ தனியாக அங்கே போய் வைக்காதே" என்று எச்சரித்தான்.

"ஏன் அண்ணா?"

"ஏன் என்றால் அப்படித்தான்!" கிட்டப்பா "ளொள்" என்று குரைக்கவும், மேற்கொண்டு எதுவும் கேட்க அஞ்சி, அவள் வாயை மூடிக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றாள். மறுநாள் அதே நேரத்துக்குக் கிட்டப்பா தன் வீட்டுச் சாளரத்தின் வழியே அடுத்த வீட்டுப் பக்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் ஒரு திடுக்கிடும் காட்சியைக் கண்டான்.

அடுத்த வீட்டு மாமா ஒரு கண்ணாடி முன்பு நின்றுகொண்டு கிழவன் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டிருந்தார். முகத்தில் சுருக்கம் விழுவதற்காக ஏதோ வெள்ளைப் பொடியைக் கரகரவென்று தேய்த்துக்கொண்டார். தலையில் ஒரு நரைத்த டோபாவைப் பொருத்திக்கொண்டார். அதே போல் நரைத்த மீசை, தாடிகளையும் முகத்தில் இணைத்துக்கொண்டார். நெற்றியில் பட்டை பட்டையாக விபூதியைக் குழைத்துப் பூசிக்கொண்டார். காவி நிற ஜுப்பாவும் குங்கும நிற வேஷ்டியும் அவர் உடம்பில் ஏறிக்கொண்டன. அருகே மேஜைமீது கிடந்த ருத்திராட்ச மணி மாலையொன்றைக் கையில் எடுத்துக்கொண்டார். அவர் முகத்தில் ததும்பிய திருப்திப் புன்னகை முகத்தை மறைத்துக்கொண்டிருந்த தாடி மீசைகளையும் தாண்டிக்கொண்டு

வெளிப்படுவதைக் கிட்டப்பாவினல் தெளிவாய்க் காணமுடிந்தது. தாடிவாலா மாறுவேடம் முடிவடைந்ததும் கண்ணுடியில் ஒரு முறை தம்மைத் தலையோடு கால் பார்த்துத் திருப்தி படைத்தவராக ஜன்னல் கதவைச் சாத்துவதற்காகப் பின்புறம் திரும்பினர். கிட்டப்பா சடாரென்று கழுத்தை இழுத்துக்கொண்டு பின் வாங்கினன்.

'அடுத்த வீட்டு மாமா எதற்காக இப்படிப் பகல் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும்? ஏதோ ஒரு மர்மம் அவரைச் சூழ்ந்துள்ளது. நேற்றுனல் போலீஸுக்கெல்லாம் தம்மைக் கண்டால் பயம் என்ருர்! இவர் ஒரு திருடன் என்பதில் துளியும் ஐயமில்லை.'—கிட்டப்பாவின் சந்தேகம் வலுத்தது. துப்பறியும் சிறுவர்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட அவன் படித்த சிறுகதைகள் யாவும் கற்பனையில் தோன்றி அவன் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தன. அவன் ஒரு முடிவுக்கு வந்தான். 'நேரே போலீஸ் நிலையத்துக்குப் போக வேண்டியது; போய், இந்த வேஷக்காரனைப் பற்றி எச்சரிக்கை செய்ய வேண்டியது.' - இந்த முடிவை எட்டியதும் கிட்டப்பா அவசர அவசரமாகத் தன் உடுப்பை மாற்றித் தலையை வாரி விட்டுக்கொண்டான்.

ஐயம்மா, "எங்கே அண்ணு போகப் போகிருய்?" என்று கேட்டதும், பெரிய வெற்றி வீரனைப் போல் தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்துக்கொண்டே "இன்னும் சிறிது நேரத்தில் வந்து சொல்கிறேன். அடுத்த வாரத்துக்குள் என்னுடைய பேர் பத்திரிகைகளில் எல்லாம் வரப் போகிறது, பார்" என்று பதிலளித்துவிட்டு மிடுக்குடன் நடந்தான். அவள் ஒன்றும் புரியாமல் மிரள விழித்தபடி அவன் போவதையே பார்த்துக்கொண்டு நின்ருள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் நிலையத்தை அடைந்த கிட்டப்பா இன்ஸ்பெக்டரைப் பேட்டி கண்டு தன் சந்தேகத்தை அவரிடம் தெரிவித்தான். சிந்தனையுடன் தம் வழுக்கை மண்டையைத் தடவிக்கொண்ட அவர், "நீ சொல்கிறபடியும் இருக்கலாம். இந்தக் காலத்தில் கௌரவமான மனிதர்கள் போல் வாழ்பவர்களில் பெரும்பாலோர் திருட்டுத்தனம் செய்யும் மொல்லமாறிகள் தாம். கதைகளில் வருகிற மாதிரி உண்மையிலேயே நடக்கக் கூடாதா என்ன?" என்ருர். இந்தச் சமயத்தில் பின்னல் காலடி ஓசை கேட்டது. கிட்டப்பா திரும்பிப் பார்த்தான். பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உள்ளே, அடுத்த வீட்டுச் சாமியார் நுழைந்துகொண்டிருந்தார். அவர் அருகே நெருங்குவதற்கு முன் கிட்டப்பா, "ஸார்! இவர் தான் அந்த ஆசாமி!" என்று இன்ஸ்பெக்டருக்கு ரகசியக் குரலில் தெரிவித்துவிட்டான்.



"யார் நீங்கள்? என் உத்தரவில்லாமல் உங்களை உள்ளே விட்டது யார்?" என்று சற்று அதட்டினாற் போல் வினவினார் இன்ஸ்பெக்டர்.

தாடிவாலா நகைத்துக் கொண்டே, "காலையிலேயே சொல்லியனுப்பினேனே?" என்றார். அவருடைய குரலைக் கேட்டதும், "ஓஹோ; தங்கசாமியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு இடி இடியென்று சிரிக்கலானார். கிட்டப்பா திரு திருவென்று விழித்தான். சாமியார், "என்ன சிரிக்கிறீர்கள்? என் வேஷத்தைப் பார்த்துவிட்டா? என்ன கிட்டப்பா, எங்கே இப்படி? என்னைப் பற்றிப் புகார் சொல்ல வந்தாயா?" என்றார்.

சிரிப்பு ஓய்ந்ததும், இன்ஸ்பெக்டர் நடந்ததைச் சொல்லிவிட்டு, "தம்பி? இவர் சென்னையிலிருந்து மாற்றப்பட்டு வந்திருக்கும் பெரிய சி. ஐ. டி. அதிகாரி. பெரிய பெரிய திருடன்களையெல்லாம் பிடித்துக் கொடுத்திருக்கும் இவரையே நீ கடைசியில் திருடனுக்கப் பார்த்தாயே?" என்றார். கிட்டப்பாவின் முகத்தில் அசடு வழிந்தது. சி. ஐ. டி. தங்கசாமி அவன் முதுகில் செல்லமாகத் தட்டி, "பேஷ்! நீ இப்படி ஏதாவது செய்து வைப்பாய் என்று எனக்குத் தெரியும். இதை எதிர்பார்த்துத் தான் நேற்று தமாஷாகப் 'போலீஸாருக்கெல்லாம் என்னைக் கண்டால் பயம்' என்று சொன்னேன்" என்று சொல்லி விட்டுத் தாமும் நகைத்தார். கிட்டப்பா தன் அசடு வழியும் முகத்தை மறைப்பதற்காகத் தலையைத் தாழ்த்திக்கொண்டான்.

எனினும் கிட்டப்பா தன் தங்கையிடம் சொல்லியபடி மறுவாரம் அவன் பெயர் பத்திரிகைகளில் வெளிவரத்தான் செய்தது. 'சி. ஐ. டி.யையே சந்தேகித்த சிறுவன். விசித்திர நிகழ்ச்சி' என்ற தலைப்பின் கீழ் அந்த ரசமான நிகழ்ச்சி அவன் பெயருடன் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது.

---

# இது தெரியுமா?

1. கண்ணாடியின் பிம்பத்தில் உங்களுடைய இருதயம் மார்பின் எந்தப் புறத்தில் இருக்கிறது?
(வலது; இடது; மேற்புறம்; கீழ்ப்புறம்.)
2. தமிழ் இலக்கண நூலான நன்னூல் எழுதியவரின் பெயர்?
(வீரமாமுனிவர், பவணந்தி முனிவர், இடைக்காடர்.)
3. பூமிக்கு மிகவும் அருகில் உள்ள கிரகம்?
(வெள்ளி, சந்திரன், யூரானஸ்)
4. மகாவம்சம் என்றால் என்ன?
(சம்ஸ்கிருத காவியம். ராஜராஜ சோழனின் வம்சம். இலங்கைச் சரித்திரம்.)
5. சினிமாவில் பிலிம் நிமிஷத்துக்கு எத்தனை அடி ஓடுகிறது?
(90 அடி, 100 அடி, 110 அடி.)
6. ஐராவதி, மாவலிகங்கை, அமேசான் எந்த நாடுகளுக்குச் சொந்தமான நதிகள்?
(முதல் நதி: சயாம், பர்மா, மலேயா; இரண்டாவது: இலங்கை, இந்தியா, திபேத்; மூன்றாவது: ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா)
7. டெலிபோனில் எவ்வளவு தூரம் பேசலாம்?

(விடை: 26-ஆம் பக்கம்)

# எலி வளை தோண்டக்கண்டேன்

காப்டன் சேஷாத்திரிநாதன்

ஒன்றும் அறியாத விட்டலபட்டர் சம்சாரத் தொல்லை பொறுக்காமல் ஜோதிடம் சொல்லிப் பிழைக்கலாம் என்று புறப்பட்டார். அன்று தாம் கண்டதையெல்லாம் மந்திரம்போல் சொல்லி, துப்புக் கண்டுபிடிக்க ஆரம்பித்தார். பண்டங்கள் களவுபோன ஒரு வீட்டில் சென்று திருடினவனைத் தேடிக் கொடுக்க ஒரு மந்திரம் சொல்லி ஜபம் செய்தார். ''எலி வளை தோண்டக் கண்டேன், ஆந்தை விழிக்கக் கண்டேன், நெட்டைப் பனைமரம் நிற்கக் கண்டேன்; மான் ஓடக் கண்டேன்'' என்று சொல்லி முடிக்கும் முன்னே, வீட்டு வேலையாள் ஒருவன் ஓடிவந்து இவர் காலில் வீழ்ந்து, ''நான் செய்தது தவறு. இதோ இருக்கிறது, திருடின பண்டம்'' என்று சொல்லிப் பட்டரிடம் பொருளை ஒப்படைத்தான். திருடினவனுக்குத் தான் சுரங்கம் வைத்ததையும், விழித்துப் பார்த்ததையும், திகைத்து நின்றதையும், ஓடினதையும் இவர் கண்டு விட்டுத் தான் இப்படிப் புதிராகச் சொல்லி விட்டாரென்று தோன்றியது.

இந்தக் கதைக்கும் எலியைப் பற்றிச் சொல்வதற்கும் என்ன தொடர்பு என்று கேட்டுவிடக் கூடாது. எலிகளைப்பற்றிய கதைகளைக் கேட்க வாசகர்களான இளைஞர்கள் விரும்புவீர்களென்றே இங்கே சொல்லுகிறேன். நான் தாத்தாவானதால் உங்களுக்குக் கதை சொல்ல உரிமையுள்ளவன். எலிகளைப்பற்றி ஆங்கிலத்தில் செய்யுளாக எழுதிய ஒரு கதை உண்டு.

திரு. ராஜசூடாமணி என்பவர் இந்தக் கதையை ஓர் அழகிய செய்யுளாக எழுதியுள்ளார். அதை நீங்கள் நிச்சயமாய் வாசிக்கவேண்டும். ஹாமிலின் என்றொரு நகரம். அதன் தலைவர்களுக்கு ஒரு தலைவலி. அதுதான் ஊரில் எலிகளின் தொந்தரவு. மக்கள் அனைவரும் தலைவர்களைச் சூழ்ந்து கொண்டு, ''நகரசபையில் நீங்கள் நிர்வாகம் செய்யவேண்டுமானால் நகரத்திலிருந்து முதலில் எலிகளைத் துரத்துங்கள்'' என்றனர். எலிகள் பயிரையெல்லாம் அழித்தன. வீட்டில் பண்டங்களையெல்லாம் நாசம் செய்தன. வளைகளுக்குள் தானியங்களையெல்லாம் கொண்டு சென்றன. ஒரு வளையை அடைத்தால் வேறொரு வழியாக வளையிலிருந்து வெளியே வரும். உறங்கும்போது படுக்கையைக் கடித்துவிடும். காலைச் சுரண்டிவிடும். பிடிக்கப் போனால் பதுங்கிக் கொள்ளும். எலிப்பொறிகளிலிருந்து பண்டங்களைத் தந்திரமாய் எடுத்துக் கொண்டு பொறியில் அகப்படாமல் ஓடிவிடும். அல்லது பொறியின் அருகில் செல்லாமலே இருந்துவிடும். பாஷாணம் வைத்தால் அதை ஒன்று இரண்டு எலிகள் தின்று இறப்பதைக் கண்டு பிற எலிகள் அருகில் செல்லாமல் ஓடிவிடும்.

வீட்டிலிருக்கும் காகிதங்களையெல்லாம் கடித்துக் கிழித்துவிடும்; ஆடைகளைக் குதறிவிடும்; சாப்பிடும்போதே வந்து மக்களைச் சூழ்ந்துகொண்டு உணவையெல்லாம் திருடிக்கொண்டு ஓடிவிடும்; மரப்பெட்டிகளைக் குடைந்துவிடும். இப்படிப் பலவகையில் நகர ஜனங்



களுக்குத் துயரத்தை எழுப்பிக் கொண்டிருந்தன. தலைவர்கள் என்ன செய்வது என்றறியாமல் தலையைச் சொறிந்து கொண்டும் முகத்தைச் சிணுங்கிக்கொண்டும் இருந்தார்கள். பொதுமக்கள் நகரத் தலைவர்களைச் சூழ்ந்துகொண்டு, ''உங்களைப்போன்ற மக்குகளை நாங்கள் பார்த்ததேயில்லை. இறங்குங்கள் பதவியிலிருந்து. உங்களால் எங்களுடைய அவதியை நீக்க முடியவில்லையே!'' என்று கூச்சலிடவே தலைவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள்.

இப்படி அல்லும் பகலும் அமைதியில்லாமல், நகரத்தாருடைய தொல்லையை நீக்கமுடியாது தயங்கும் நிலையிலிருக்கும் பொழுது அங்கே வந்தான் ஒருவன். விசித்திரமான ஆடை! அதில் பல வர்ணத் துணிகள் தைக்கப்பட்டிருந்தன. நமது குடுகுடுப்பையாண்டியைப்போல் வேஷம் பூண்டிருந்தான். கழுத்தில் ஒரு சிறு உருமாலும் அதில் ஒரு வாத்தியக் குழலும் தொங்கின. அவனுக்குக் கூரான கண்களும் கூர்ப்பான மூக்கும் குறும்பொளியைத் தோற்றுவித்தன. வியப்பையும் அச்சத்தையும் எழுப்பும்படியான இவனுடைய உருவத்தைக் கண்ட நகரத்தலைவர்கள் சற்றுத் திகைத்தார்கள். இவர்களைக் கண்டதும் அவன் ஒரு புன்னகையுடன், ''நீங்கள் இந்த எலிகளால் படும் துயரத்தை நீக்கிவிடுகிறேன். எத்தனையோ கனவான்களுடைய மனையிலிருந்தும், அரசர்களுடைய நாட்டிலிருந்தும் இவ்விதத் தொல்லைகளை எவ்வளவோ ஒழித்திருக்கிறேன். உங்களுக்கும் அப்படியே செய்துவிடுகிறேன். ஆனால் எனக்கு ஆயிரம் பவுன் தருவீர்களா?'' என்று கேட்டான். தலைவர்கள், ''ஆயிரமா? பதினாயிரம் பவுன் தருவோமே!'' என்றார்கள். மந்திரக் குழலெடுத்து ஊதினான். உடனே எலிகளெல்லாம் வீடுகளிலிருந்தும் பொந்துகளிலிருந்தும் இன்பமான தின்பண்டங்களுடைய வாசனை தோன்றினால் எவ்வளவு குதூகலமாய் ஓடிவருமோ, அவ்வளவு குதூகலமாய் வந்து மந்திரவாதியாகிய அவனைப் பின் தொடர்ந்து சென்றன. அருகிலிருந்த ஆற்று நீரில் அவன் இறங்கவே எல்லா எலிகளும் உற்சாகமாக இறங்கி மூழ்கிப்போயின.

மந்திரவாதி திரும்ப வந்து, ''எங்கே என்னுடைய ஆயிரம் பவுன்கள்?'' என்று கேட்க நகரத் தலைவர்கள் கையை விரித்தார்கள். ஒன்றும் கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டார்கள். இறந்துபோன எலிகள் எப்படித் திரும்பிவர முடியும் என்ற தைரியத்துடன் இப்படிச் சொன்னார்கள். எடுத்தான் மந்திரவாதி மந்திரக் குழலை! ஊதினான் வேறொரு மெட்டில். வீடுகளிலிருந்து குழந்தைகளெல்லாம் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் குதித்துக்கொண்டும் வந்தனர். பெற்றோர்களும் பிறரும் ஒன்றும் செய்ய இயலாமற் திகைத்து நின்றனர். மந்திரக்குழலோசை அவர்களை இழுத்துக்கொண்டு ஒரு மலை யருகில் சென்றதும் அந்த மலை திறந்தது! மந்திரவாதியோடு குழந்தைகளும் அதனுள் சென்றனர். மலை மூடிக்கொண்டது. தலைவர்கள் தலை குனிந்து மனமிடிந்து கதறினார்கள்.

எலிகள் செய்யும் கூத்துக்கு வேறொரு கதையிருக்கிறது. பிஷப் ஹாட்டோ என்பவர் தன் நிலத்திலிருந்து வந்த தானியத்தையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு பஞ்சத்தால் வருந்தும் அந்நாட்டு மக்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. அவர்கள் உணவின்றி இறந்தனர். பிஷப் ஹாட்டோ சிரித்துக்கொண்டு, ''வேண்டும்! வேண்டும்! அசடுகள்!'' என்றார். ஆனால் என்ன நேர்ந்தது? விரைவில் நாட்டிலிருந்த எலிகளெல்லாம் தானியம் தேடி பிஷப் ஹாட்டோவின் களஞ்சியத்தை யடைந்தன. அவர் வெகுநாளாய்ச் சேர்த்து வைத்திருந்ததை யெல்லாம் ஒரு நாளுக்குள்ளேயே அந்த எலிகள் எடுத்துச் சென்றன. ஹாட்டோவும் உண்ண உணவில்லாமல் இறந்தார்.

எலிகளுடைய சாமர்த்தியம் பற்றியும் மற்றும் குணங்கள் பற்றியும் எவ்வளவோ கதைகள் உள்



ளன. அவற்றில் முக்கியமானவை பஞ்ச தந்திரக் கதைகள்; பெருங் கருத்துக்கள் அடங்கியவை. சிறுவர்களுக்கும் முதியோருக்குங்கூட இன்பமளிக்கக் கூடியவை.

வளை தோண்டுவதே எலிகளுக்கு இயல்பான செயல். எலிவளை ஓர் அதிசயமான அமைப்புத்தான். சேமித்து வைக்கும் தானியத்தைப் பறிகொடுக்காமல் காப்பதற்கு வேண்டிய பந்தோபஸ்து வளையில் செய்யப்பட்டிருக்கும். எலிகள் எதிரிகளான பிராணிகள் கையில் அகப்படாமல் தப்ப வளைக்குப் பல துவாரங்கள் இருக்கும்.

வரிசை வரிசையாக எலிக் குடும்பங்கள் அழகிய அறைகளைச் செய்து ஒரு பாதாள நகரம்போல் சில வளைகளை அமைத்திருக்கும். இந்த வளைகளைக் கண்டுதான், ஒரு வேளை பாதள உலகமென்று கற்பித்து, அதில் தேவகன்னிகள் தேவ வீரர்கள் என்றெல்லாம் இருந்ததாகக் கூறுகிறார்கள் போலும்! அவர்களைப் பாதாள உலகவாசிகளாகக் கருதி, புராணக் கதைகளைக் கற்பித்திருக்கலாம். பாம்புகள், எலிகளை விழுங்கிவிட்டு வாழ்வது வழக்கம்.

ரஷ்ய நாட்டில் சில இடங்களில் ஒருவகை எலிச்சாதி சாதாரண மனித நகரங்களைக் காட்டிலும் அதிக மடங்கு விஸ்தீரணமுள்ள வளைகளையும் சுரங்கம் செய்து கொண்டு வசிக்கின்றன. ஆங்காங்கு நிலத்தில் துவாரங்களை அமைத்துச் சத்துருக்கள் வருவதை அங்கங்கே இருந்து எச்சரித்துக் கொள்ளும். அவை கூட்டமாக வந்து நாட்டுப் பயிரையெல்லாம் அழித்து விடுகின்றனவாம். இந்த வளைகளை இடித்து எலிகளை விரட்டுவது சாத்தியமாகாமல் விஷப் புகையைச் செலுத்தி வளையிலேயே எலிகளைக் கொன்று விடுகிறார்கள்.

நம் வீடுகளில் சுவருக்கடியே குடைந்து மண்ணைத் தோண்டி நாசம் செய்யும் பெருச்சாளிகளும் எலி வகுப்பைச் சேர்ந்ததேயாம். தோட்டமெங்கும் வளை தோண்டிக் கொண்டே யிருக்கும். இந்த வளைகள் பெருச்சாளி குடியிருப்பதற்கல்ல. கதவுகளையும் முன்பற்களால் அறுத்துக் கொண்டேயிருக்கும்; இது மரத்தூளை உணவாகத் தின்பதற்கல்ல. எலிகள், பெருச்சாளிகள் இவைகளின் மேல் வரிசை முன் பற்கள் வெகு கூராகவும் நீண்டும் இருக்கும். எலி இந்தப் பற்களை உபயோகித்துக் கொண்டேயிராமற் போனால் இவை வளர்ந்து வளைந்து எலியின் கழுத்தைக் குத்திச் சதையைக்

## இது தெரியுமா, விடை:

1. இடது பக்கம், 2. பவணந்தி முனிவர், 3. வெள்ளி, 4. இலங்கைச் சரித்திரம், 5. 110 அடி, 6. முதல் நதி: பர்மா; இரண்டாவது: இலங்கை; மூன்ருவது: தென் அமெரிக்கா 7. கம்பி எவ்வளவு தூரம் செல்கிறதோ அது வரையில்.

கிழித்துவிடும். இதற்காக எலிகள் இந்தப் பற்களால் மரத்தையும் மண்ணையும் அறுத்துக்கொண்டேயிருக்கின்றன.

இந்தக் காரணத்தைச் சிலர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ''எங்களுக்குத் தெரியும் பெருச்சாளி தோண்டுவதற்குக் காரணம்'' என்பார்கள். ''பெருச்சாளி போன ஜன்மத்திலே மனிதனுக இருந்து நகை, பணம் முதலியவற்றைப் புதைத்து வைத்திருக்கும். இந்த ஜன்மத்தில் அந்தப் புதையலைத் தோண்டுகின்றன'' என்பார்கள். இப்படி நம்புகிறவர்களோடு வாதாடி உண்மையைத் துலக்க முடியுமா?

எலிகளில் எத்தனை விதம்! வெள்ளை எலி, கறுப்பு எலி, செங்கற்கட்டி நிறம் கொண்ட எலி, சுண்டெலி, இப்படி ரகங்கள் அநேகம். சில எலிகள் நம்மைக் கண்டால் பயந்து ஓடும். சில நம் கண்ணில் படாமலே பதுங்கியிருந்து தந்திரமாக வேலை செய்து நமது பண்டங்களைக் கவர்ந்து செல்லும். வயல்களில் சென்று பயிரையெல்லாம் அழித்துவிடும்.

எலிகளால் நமக்குப் பண்டங்கள் மட்டும் நாசமாவதாய் நினைக்க வேண்டாம். வேறு விதத்திலும் நமக்குத் துன்பம் ஏற்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் பிளேக் நோய் மிகவும் பரவியிருந்தது. இதற்குக் காரணம் எலிகளே. எலிகளுக்கும் மனிதர்களுக்கும் ஏற்படும் பிளேக் நோய் ஒரே வகை. எலிகள் பிளேக் நோயால் இறந்து போகும் பொழுது அவைகளுடைய உடம்பில் ஒட்டியிருக்கும் தெள்ளுப் பூச்சி மனிதனைத் தேடி வந்து கடித்து அவனுக்குப் பிளேக் நோயைத் தந்துவிடும். விஷப் புகையை உபயோகித்து வளைகளிலிருக்கும் எலிகளை யெல்லாம் கொன்றும், தானியம் சேமித்து வைப்பதை எலிகளுக்கு அகப்படாமல் காப்பாற்றியும், வேறு சுகாதார விதிகளை அநுசரித்தும் பிளேக் நோய் இப்போது மக்களிடையே தலை காட்டாமல் மறைந்து போகச் செய்திருக்கிருர்கள்.

சாதாரண எலிகள் மனிதனுக்கு இணங்குவதில்லை; வெள்ளை எலிகள் மட்டும் மனிதனுக்கு இணங்கக் கூடியவை. கையில் வைத்துக் கொள்ளலாம். கூண்டுகளில் வைத்து வளர்க்கலாம். குழந்தைகள்கூடத் தொட்டு எடுத்து விளையாடலாம். ஆராய்ச்சிக்கு வெள்ளை எலிகளை வெகுவாகப் பயன்படுத்துகின்றனர். வைடமின் சத்துக்களைப்பற்றிய அறிவு பெருகுவதற்கு வெள்ளை எலிகள் வெகுவாகப் பயன்படுகின்றன.

முள்ளம்பன்றி, சீமைப் பெருச்சாளி, அணில், முயல் போன்ற பிராணிகளையும் எலிகளையும் ஒரே வகுப்பில் சேர்க்கலாம். இவ்வகைப் பிராணிகளுக்கெல்லாம் முன்பற்கள் இரண்டும் வெகு கூர்மையாயிருக்கும். இந்தப் பிராணிகள் உலகில் செய்யும் கூத்து வியப்பை எழுப்பக்கூடியது. இவைகளைப் பற்றித் தனித் தனியாகத்தான் சொல்ல வேண்டும்.

நவீனப் போர் முறையிலிருந்து காத்துக்கொள்ள மக்கள் பூமியைக் குடைந்து வாழ வேண்டிவரும் பொழுது, செவ்வாய் மனிதர்கள் நம்மைப் பார்த்தால் நம்மையும் வளைகளில் வாழும் பிராணிகள் என்று நினைக்கலாமல்லவா?




## பிறவிக் குருடன்

இயற்கை இயற்கை என்கின்றீர்
என்னே அதனின் உருவம்தான்

செயற்கை யான பொருளாமோ
சிறிதே விளக்கிக் கூறிடுவீர். [1]

சிங்கம் புலியாம் சிறுத்தையுடன்
சீறும் பாம்பும் இவ்வுலகில்

எங்ஙனம் இருக்கும் என்றேதான்
எனக்கே விளக்கிக் கூறிடுவீர். [2]

நாட்டைக் காத்த தலைவர்களை
நானும் காண விழைகின்றேன்

ஏட்டில் கூட அவர்படத்தை
என்னால் காண வகையில்லை. [3]

அலைகள் மோதும் கடலென்பார்
அழகு நீல நிறமென்பார்

பலரும் போற்றும் அதனை நான்
பார்த்துக் களித்திட வகையில்லை. [4]

இங்ஙனம் ஏங்கி வாடுகிற
இந்த மனிதன் யாரென்றே

உங்களில் யாரும் கேட்டிடலாம்
உரைப்பவன் பிறவிக் குருடன்தான்! [5]

திரு. வி. அரிகிருஷ்ணன்.

# செவிடன் யார்?

மணா. அரங்கசாமி

ஆனந்தனுக்குச் சிறிது தற்பெருமை அதிகம். அவனிடம் ஒரு சைக்கிள் இருந்தது. அதில் ஏறி உட்கார்ந்து விட்டானால் சுற்றுப்புற ஞாபகமே இருக்காது! அத்தனைக்கும் அவன் சைக்கிளில் 'பிரேக்'கோ அல்லது 'பெல்'லோ கிடையாது. ஆனாலும் அவன் செல்லும் வேகம் சொல்லி முடியாது!

எதிரே சைக்கிளில் வருபவரை அதிகாரத் தோரணையில், 'பிரேக்கைப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று கூறுவான். அவனுக்குத் தன் சைக்கிளைப்பற்றியோ தன்னைப் பற்றியோ கவலை இல்லையென்றால் எதிரே வருபவருக்குக் கூடவா அப்படி இருக்கும்? அவர்கள் அவனைப் பார்த்து முறைத்தபடி ஒதுங்கிச் சென்றுவிடுவார்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. கடையில் சாமான் வாங்கும் ஜனங்களின் கூட்டம் அதிகமாக இருந்தது. அன்றும் ஆனந்தன் வேகமாகச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தான். ராயர் தெரு திருப்பத்தில் ஒருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். ஆனந்தன் வழக்கம் போலவே அவரைப் பார்த்து, "சார், உங்கள் சைக்கிள் பிரேக்கைப் பிடித்துக் கொள்ளுங்கள். என் சைக்கிள்மீது மோதி விடப் போகிறது!" என்றான். அவர் ஊருக்குப் புதிதானாலும் அவனைப் பற்றியும் அவன் சைக்கிளைப் பற்றியும் மிக நன்றாக அறிந்திருந்தார்! ஆகவே அவர் புன்னகை புரிந்தபடியே, வேகத்தைச் சிறிது மட்டுப் படுத்தினார்.

ஆனால் ஆனந்தனோ, "ஏன் சார், நான் சொல்வது காதில் விழவில்லையா?" என்றான் சிறிது கோபத்தோடு. ஆயிற்று; நிச்சயமாக ஆனந்தனின் சைக்கிள் அவர் சைக்கிள் மீது மோதிவிடும்! ஆனந்தன் வேறு வழியில்லாமல் காலால் டயரை உராய்ந்து வேகத்தைச் சமாளித்தான். அவன் வாய், "செவிடனெல்லாம் சைக்கிள் விடவந்தால் இப்படித்தான்" என்று சிறிது உரக்கவே கூறி விட்டது!

அவர் காதில் அது விழுந்து விட்டது. ஆகவே நிதானமாகச் சைக்கிளை விட்டு இறங்கி ஆனந்தனை நோக்கிச் சைக்கிளைத் தள்ளியபடி வந்து, "என்ன தம்பி, சொன்னாய்?" என்று கேட்டார்.

ஆனந்தன் சாமர்த்தியமாக, "ஒன்றுமில்லை! என் சைக்கிளில்தான் பிரேக் கிடையாது! நீங்களாவது பிரேக்கைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்றேன்" என்று கூறியபோது அவன் உடம்பு லேசாக நடுங்க ஆரம்பித்தது! அதைக் கண்ட அவர் கோபப்படாமல், "சரி தம்பி, என்னோடு சற்று வருகிறாயா?" என்று கேட்டார்.

ஆனந்தன் ஏன் என்ற பாவனையில் முகத்தைச் சுளித்தான். அவர், "தம்பி, நான் இந்தப் பக்கம் புதிதாக நேற்று முதல் நியமிக்கப்பட்ட ஹெட்கான்ஸ்டேபிள். பிரேக் இல்லாமல் சைக்கிள் ஓட்டலாமா? வா, ஸ்டேஷனுக்கு" என்று சிரித்தபடி கூறினார்.

அதைக் கேட்ட ஆனந்தனுக்கு உலகமே வேகமாகச் சுழலுவது போலத் தென்பட்டது; பாவம்!



# முடிவு இதுதானா?

**சுருமீன்**

டைரெக்டர் பொன்னுசாமி ஹாய்யாகத் தமது அறையில் உட்கார்ந்துகொண்டு சில மேனாட்டு நாவல்களைப் புரட்டிக்கொண் டிருந்தார். அவர் அருகில் அவர் மனைவி ஸ்ரீமதி பார்வதத்தம்மாள் (இயற்பெயரா அல்லது காரணப் பெயரா என்று என்னைக் கேட்காதீர்கள். இரண்டுமே அவர்களுக்குப் பொருந்தும்.) புதிதாக ஸ்டுடிபேக்கர் கார் ஒன்று வாங்குவதற்குத் தன் கணவனிடம் மணியான ஆலோசனைகளை அளித்துக்கொண்டிருந்தாள்! இந்தச் சமயந்தான் வாசலில் ஏதோ கூச்சல் எழுந்தது. துள்ளி எழுந்தார் பொன்னுசாமி.

''தர்வான்! என்ன கூச்சல்!'' அங்கே?'' என்று தன் அடித்தொண்டையிலிருந்து கேள்வி ஒன்றையும் உதிர்த்துவிட்டார். பதறியபடியே ஓடிவந்தான் கூர்க்காச் சேவகன். ''எசமான்! யாரோ ஒரு பரதைப் பயலுங்க. வயசு பத்து வயசு இருக்கும். 'எங்கப்பாரு டைரெக்டர் ஐயாவோட சேர்ந்து படிச்சவங்க. அவங்களுக்கு எங்கம்மா கடிதாசு கொடுத்திருக்கு' என்று அரை மணியா வாசலிலேயே நிற்கிறானுங்க. இதோ!'' என்று கையிலிருந்த கடிதாசை டைரெக்டரிடம் நீட்டினான். டைரெக்டர் படிக்க ஆரம்பித்தார்:

''ஐயா,

மிகுந்த தயக்கத்துடன் இக்கடிதத்தை நான் எழுதுகிறேன்.



மன்னியுங்கள். என் கணவர் அப்துல்கனி தங்களுடன் சிறு வயதில் படித்ததாகவும் தாங்களும் அவரும் உயிருக்குயிரான தோழர்கள் என்றும் என் கணவர் அடிக்கடி கூறுவார்.

தற்போது என் புருஷர் கடுமையான நோயில் படுத்து விட்டார். என் குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒரே நபர் அவர்தான். அதிகமான பணம் இருந்தால்தான் வைத்தியம் செய்யலாம் என்று டாக்டரும் கூறுகிறார். என்மீது நம்பிக்கை வைத்தோ அல்லது தங்கள் பழைய நட்பின்மீது பாசம் வைத்தோ தாங்கள் ஐம்பது ரூபாய் பணம் கடனாகத் தருவீர்களென நம்புகிறேன். எப்பாடு பட்டாகிலும் ஒரு மாதத்தில் திரும்பத் தந்து விடுகிறேன்.

உண்மையுள்ள,
கதீஜா.''

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததுதான் தாமதம். பர்வதத்தம்மாள் தண்ணீரில் போட்ட பொட்டாசியமாக மாறிவிட்டாள். ''ஹாங். காலெ முறிச்சு வெளியே விரட்டு, அந்தக் கழுதையை. அப்பாவாம், பழைய சிநேகிதமாமுல்லே. பிச்சை எடுக்கணும், ஊரை ஏமாத்தணும்னு வேறே ஆளில்லையா? நாங்கதான் ஆப்புட்டோமோ?'' என்று குதி குதியென்று குதித்தாள். (உண்மையில் குதிக்க அவள் உடம்பு இடம் தராது. சும்மா, கதைக்கோசரம் எழுதி வைத்தேன்!)

பிறகு என்ன? வந்த பையனைக் காலை ஒடிக்காத குறைதான்!

* * *

பத்து நிமிஷங்கள் கழிந்தன.

''பம் பம் பம்..பா..ம்ம்..'' என்ற சப்தம் கேட்டது; கற்பக வில்லாவிலிருந்து.

ஆம். டைரெக்டர் பொன்னுசாமி எம். பி. டி. ஸ்டுடியோவிற்குத்தான் புறப்பட்டுவிட்டார். அதாவது முகமது பின் துக்ளக் ஸ்டுடியோவிற்குத்தான்.

''என்ன சார், கதாசிரியர் சார்! ஒரு வழியா ஏதாவது உருப்படியான கதை எழுதி முடிச்சீரா, இல்லையா? நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே. முதலாளி சொன்ன மாதிரி ட்ராஜெடியா இருந்து, ஜனங்க மூக்கைச் சிந்திப் போடற கதையா இருந்தாத்தான் பணம்னு. என்ன மாதிரி எழுதியிருக்கிறீர்?'' என்று கதாசிரியரைப் பார்த்துக் கேட்டார்.

''ஆசிரியர், ''ஏதோ சார்! என்னால் முடிஞ்சவரைக்கும் டிரை பண்ணியிருக்கிறேன். அநேகமாக இதுவே உங்கள் படத்துக்கு ஏற்றதாக இருக்கும் என்று நம்புகிறேன்'' என்று தன் ஒலி அலைகளை 'ப்ராட்காஸ்ட்' செய்தார்.

''போதும் போதும் உம்ம வியாக்கியானம். முதலில் கதையைப் படிங்க'' என்று உத்தரவிட்டார் டைரெக்டர். சுருக்கத்தை வாசிக்கத் தொடங்கினார் கதாசிரியர்.

''....அவ்வளவு இணைபிரியாமல் சிறு வயதிலேயே இருந்தனர் அவர்கள். இந்த வீட்டில் குழந்தை அழுதால் அதன் எதிரொலி போல் ராம்சந்தரின் வீட்டுக் குழந்தையும் அழும். அது சிரித்தால் முதல் குழந்தையும் சிரிக்கும். ஏதோ இரட்டைக் குழந்தைகளைப் பிரித்து விட்டது போலத்தான் இரண்டும் இருக்கும். நாட்கள் பறந்தன. இரண்டும் வளர்ந்து பெரியதாயின. எங்கிருந்தோ வந்த பாசம் என்னும் சங்கிலி, அன்பு என்ற அரவணைப்பு இருவரையும் பிணைத்தது. பூர்வ ஜன்மத்தில் இருவரும் ராமலட்சுமணர்களாக இருந்தார்களோ என்று ஐயுறும்படி இருந்தது அவர்கள் நட்பு. அதைக் குறித்து இரு குடும்பத்தாரும் பெருமையே அடைந்தனர்.

இரு குடும்பங்களும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவைதான். ஆனால் அவர்களது நட்பு உயர்தர வகுப்புகளுக்கும் வழிகாட்டியாகவே இருந்தது.

அந்தக் குடும்பங்களிடையே நிகழும் சில்லறைச் சச்சரவுகளும் அந்த இரட்டையர்களின் நட்பால் தவிடுபொடியாயிற்று. காலம்

முன்னேறிக்கொண் டிருந்தது. பள்ளியில் படிக்கும் பொழுதும் ஒரே விதமான நிஜார் சட்டை; ஒரேவிதமான படிப்பின் தரம். ஆனால் செல்வாக்கில் மட்டும் சற்று ராம்சந்தரின் குடும்பம் ஓங்கி இருந் தது. இருவருக்கும் ஒரே ஊதிய மாக இருந்தாலும் குடும்பத்தின் அளவால் கோபால் சிரமதசை



அடைந்தார். ஆயினும், குழந்தை களின் நட்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. நட்பு என்பது கிளாக்ஸோ கரைத்துப் போட்டி, நெஸ்டோமால்ட் பருகச் செய்து, தள்ளுவண்டியில் உலாவ அழைத் துச் சென்றால்தான் வளரும் என்று அவர்கள் கருதவில்லை. ஆனால் அடிக்கடி அவர்களிடையே நிகழும் பயங்கரமான சண்டைகள், 'பரஸ் பர விரோதத்தாலும் தர்க்கங் களாலும்தான் உறுதியான நட்பு உருவாகும்' என்ற ஸி. ஸி. கால்டன் என்ற பேராசிரியரின் தத்துவத்தை நிரூபித்தன. தற்போது அவர் கள் நன்கு வளர்ந்துவிட்டனர்.

ஆம். ஊனுக்கும் இடத்துக்கும், உடுக்க உடைக்கும் இனியும் பெற்றோரையே எதிர்பார்க்கச் சங்கோஜமடைந்தனர் அவர்கள். தங்கள் நலனின் பொருட்டுத் தங்களது பெற்றோர்கள் ஏராளமாகக் கடன் வாங்குவதையும் உணர்ந்தான் கோபாலின் மகன் குபேர். ஆயினும் என்ன செய்வது?

படாத கஷ்டங்கள் பட்டான் குபேர். சுற்றாத இடமெல்லாம் சுற்றினான் அவன். ஆனால் நாட்டில் உள்ள ஐம்பது லக்ஷம் பேரில் நீ ஒரு விதத்திலும் உயர்ந்தவனல்ல என்று உணர்த்தியது உலகம். ஏக்கத்தினாலேயே மனம் குறுகி, ஊன் ஒடுங்கினார் கோபால்.

இச்சமயத்தில்தான் ராம்சந்தர் வெளியூருக்கு மாற்றப்பட்டார். ஆயினும் நண்பர்களின் தோழமையின் தன்மை குறைந்ததாகக் கருதப்படவில்லை ஸ்ரீராமனால். பல கடிதங்கள் வெளியூரிலிருந்து வரைந்து தள்ளுவான் அவன். உண்மையில், வறுமையும் ஏக்கமும் குபேரை முழுவதும் மாற்றிவிட்டன. அவர்களது நட்பாகிய இரும்பும் துருவேறத் தொடங்கியது. ஸ்ரீராமின் கடிதங்கள் சுவரில் அடித்த களிமண் பந்தாயின. ஆயினும் அவன், நண்பனின் வறுமையே அவனைப் பதில் எழுதவும் விடவில்லை என்று மனத்தினுள் நினைத்துப் பச்சாத்தாபப்பட்டானே ஒழிய வேறொன்றும் செய்ய இயலவில்லை.

நாளடைவில் காசநோய் என்னும் பைசாசத்தின் வயப்பட்டார் கோபால். மூட்டைத் தூக்கியாவது சம்பாதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது குபேருக்கு. இச்சமயம்தான் ஒரு குறித்த கம்பெனியில் வேலை காலி இருப்பதாகவும், ஐந்நூறு ரூபாய் டெபாஸிட் செய்யச் சக்தி வாய்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம் என்றும் கேள்விப்பட்டான் குபேர். எல்லாத் தகுதிகளும் இருந்தன குபேருக்கு. ஆனால் ஒன்றுமட்டும் இல்லை. அந்த ஒன்றும் மூவெழுத்து நச்சு, ப-ண-ம்.

திணறினான் குபேர். விண்ணப்ப மனுவையும் பூர்த்தி செய்துவிட்டான். இச்சமயம்தான் ஸ்ரீராமிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"நீயும் இவ்விளம்பரத்தைக் கண்டிருக்கலாம். உன்னிடம் பணமில்லாததால் அதற்கு மனுச் செய்யவும் முடியாது என்பதை நான் அறிவேன். ஆயினும் இச்சமயத்தில் உனக்கு உதவி செய்யாவிட்டால் நட்பின் இலக்கணத்தை பொய்யாக்கியவன் ஆவேன். காலச் சக்கரச் சுழற்சியில், எனக்குப் பணக் கஷ்டம் இல்லை. ஆதலால் இத்துடன் உனக்கு அறுநூறு ரூபாய் அனுப்பியுள்ளேன். பெற்றுக் கொள்."

குபேர் நட்பின் பெருமையை முழுவதும் உணராவிட்டாலும் பணத்தைப் பெற்றுக்கொண்டான். பயனடைந்தான். அவனது வாழ்வில் விரைவில் சுழற்சி ஏற்பட்டது. தனவந்தனானான். சில நாட்கள் சென்றதும் சிறு தொகை வேண்டி நண்பன் ஸ்ரீராம் வந்தான். ஆனால் அடிபட்ட நாயைப்போலக் குபேரின் கடுஞ்சொற்களால் தாக்கப்பட்டு திரும்பிச் சென்றான்.

குபேர் கண்டானா என்ன? குபேர் மனுச் செய்துகொண்ட அதே கம்பெனிக்கு ஸ்ரீராமுவும் மனுப்போட்டான். டெபாஸிட் கட்டுவதற்கு வீட்டின் ஒரே ஆஸ்தியான தங்கச் சங்கிலியை விற்றுக்கொடுத்தார் அவன் தந்தை. ஸ்ரீராம், நண்பனின் நலனுக்காக, தன்னுடைய உண்மை நிலையான ஏழைமையில்கூட வந்த இடத்தில் பணம் களவாடப்பட்டது என்று தன் பெற்றோரிடம் புனைந்துரைத்தான்."

கதாசிரியர் கதையை இன்னும் முடிக்கவில்லை. இதற்குள் மனத்தில் சுருக்கென்றது டைரெக்டர் பொன்னுசாமிக்கு. பதறியவண்ணம் அப்துல் கனி வீட்டிற்கு ஓடினார் பணப் பையுடன். ஆனால்..

"அல்லாஹ் வஞ்சித்துவிட்டாரே, சாமி" என்ற தீனக் குரல் மட்டும் கேட்டது.

மடேரெனக் கீழே சாய்ந்தார் டைரெக்டர். பணப் பையிலிருந்த கத்தை நோட்டுகள் காற்றில் பறந்தன!

# சலனம்

'இரா.முகி'



**கண்ணன்:**

அண்ணியாம், அண்ணி! கண்ணிருந்தும் குருடனாய் வாழ்ந்த எனக்கு நல்வழி காட்டி விட்ட என் நண்பன் சோமுவுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறேன். நான், அன்பின் அவதாரம் என்று எண்ணியிருந்த அண்ணியைப் பற்றிய உண்மையை அவன் எனக்கு உணர்த்தாமல் இருந்திருந்தால் இன்னமும் அப் பாவியாகத்தான் இருந்திருப்பேன்!

ஒரு வாரத்திற்கு முன்னால் என்னை யாரும் படக்காட்சியிலோ அல்லது மாந்தோப்பிலோ பார்த்திருக்க முடியாது. ஆனால் இன்று நான் ஒரு தனிக்காட்டு ராஜா! என் விருப்பம் போல் சுற்றுகிறேன். ஏனென்று கேட்க முடியுமா என்னை? இந்தச் சுகமெல்லாம் உண்டாகக் காரணமாயிருந்தவன் நண்பன் சோமுதானே! முன்பெல்லாம் சோமு போன்றவர்களோடு பேசக்கூட மாட்டேன். எல்லாம் என் அண்ணியின் உபதேசம்தான்! நான் அவர்களோடெல்லாம் சேர்ந்தால் கெட்டுப் போவேனாம்! உண்மையை எங்கே அவர்கள் உடைத்துச் சொல்லிவிடப் போகிறார்களோ என்று பயந்துதான் அண்ணி என்னை அவர்களோடு பழகவொட்டாமல் செய்தாள் போலிருக்கிறது!

ஒரு நாள் மாலை நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். சோமு தன் சகாக்களோடு எதிர்ப்பட்டான்.

நான் அவர்களைக் கவனியாமல் என் வழியே நடந்தேன். ஆனால் அவர்களோ என்னை வந்து சூழ்ந்து கொண்டார்கள். சோமு என் கரத்தைப் பிடித்துக்கொண்டு, ''கண்ணா! வாயேன், விளையாடப் போவோம்'' என்றான். ''டேய், சோமு! ஏண்டா அந்த அணிற் பிள்ளையை வேண்டியழைக்கிறாய்? அவனைப் போய் அண்ணியின் மடியில் படுத்துத் தூங்கச் சொல்லு!'' என்று சுந்தரம் எகத்தாளமாகச் சொன்னதைக் கேட்டு எனக்குக் கோபம் பொங்கிவந்தது. எதையோ சொல்ல வாயைத் திறந்தேன். அதற்குள் சோமு, ''நீ சும்மாயிருடா. பாவம், கண்ணன் அண்ணியிடம் சிக்கி அவதிப்படுகிறான். ஒரு சினிமாவுக்கு வருகிறானா? ஒரு நாடகம் பார்க்கிறானா? ஒரு விளையாட்டு உண்டா? ஊஹூம்..அவனைத் தான் அவன் அண்ணி வீட்டிற்குள் அடைத்து உயிரை வாங்குகிறாளே!'' என்று நெடுகப் பேசிக்கொண்டே போனான்.

எனக்கு அப்போது, அண்ணி அவர்களைப் பற்றிச் சொன்னது சரியென்று பட்டது. அங்கிருந்து விரைவாகப் போய்விடத் துடித்தேன். ஆனால் சோமு என் கைகளை இறுகப் பற்றியிருந்ததால், அது முடியவில்லை. உதடுகள் துடிக்க, ''நிறுத்துடா, போதும்! என் அண்ணி ஒன்றும் என்னை வீட்டில் அடைத்து வைக்கவில்லை. நீங்களெல்லாம் கெட்டவர்கள்'' என்று அப்பாவித்தனமாகப் பேசினேன். அவர்கள் 'கொல்'லென்று சிரித்தார்கள். எனக்கோ அழுகை அழுகையாய் வந்தது.

சோமு என் முதுகைப் பரிவோடு தட்டிக் கொடுத்தபடி, ''கண்ணா! நீ ஒரு முட்டாளடா! அதனால் தான் உனக்கு உலகமே தெரியவில்லை. எங்களைப் போல உனக்கு அப்பா, அம்மா இருந்தால் அதெல்லாம் தெரியும்! அண்ணியையும் அண்ணனையும் பாடப்புத்தகங்களையும் தவிர வேறெதுவும் உனக்குத் தெரியாது. அண்ணி உனக்கு வஞ்சனை செய்வதைக் கொஞ்சமும் அறியாத அசடாயிருக்கிறாயே. மூர்த்திக்கும், உனக்கும் வேறுபாடு காட்டி நடந்துகொள்ளும் அண்ணியை நீ இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை'' என்று பேசிக்கொண்டே போனான்.

அவன் பேச்சைக் கேட்கக் கேட்க என் அறிவு குழம்பியது. அவன் சொல்வதில் உண்மையிருப்பதாக எனக்குப் பட்டது. 'நான்தானே தினமும் வீட்டு வேலைகளைச் செய்கிறேன்! அண்ணியின் மகன் மூர்த்தி படிக்காமல் ஊர் சுற்றினாலும்கூட, அவனை யாருமே ஒன்றும் கேட்பதில்லையே!' என்றெல்லாம் எண்ணத் தொடங்கினேன். அன்றுமுதல் சோமு என் நண்பன். இனி ஜம்பம் என்னிடம் சாயாது!

## அண்ணி:

ஜம்பம் சாயாதாமே! கண்ணனுடைய பேச்சு இன்று விபரீதமாக இருக்கிறதே! எப்போதும் போல் இன்று காலையும் கண்ணனைக் கடைச் சாமான்கள் சிலவற்றை வாங்கிவரும்படிச் சொன்னேன். ஆனால் அவன், ''எனக்கு வீட்டு வேலைகளெல்லாம் செய்ய நேரமில்லை! நான் ஒருவன்தான் கண்ணில் படுகிறேனோ? ஏன், மூர்த்தியை அனுப்பி வாங்கிவரச் சொல்வதுதானே! இனிமேல் என்னிடம் இந்த ஜம்பமெல்லாம் சாயாது'' என்றான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

என் மகன் மூர்த்தியைக் கடைக்கு அனுப்பினால் கவனித்துச் சாமான்கள் வாங்கி வராததோடல்லாமல், பொய்க்கணக்கும் காட்டுவான். அதனால்தான் நான் அவனை அனுப்பாமல் கண்ணனை அனுப்புவேன். கண்ணன் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டானே! கண்ணனின் அண்ணாவும், ''சுசி! என்ன, உன் மைத்துனனும் உன்னுடைய மகனைப்போல் மாறிவிட்டான். அவன் ஒரு வாரமாகப் பாடங்களை ஒழுங்காகப் படிப்ப

தில்லை என்று வாத்தியார் என்னிடம் சொன்னார். அவன் வந்தால், என்னிடம் கொஞ்சம் அனுப்பு'' என்று கண்டிப்போடு சொல்லிவிட்டுத் தம்முடைய அறைக்குச் சென்றுவிட்டார். அவருக்கு மூர்த்தியைப் பற்றிக் கொஞ்சமும் கவலை கிடையாது; கவனிப்பதுமில்லை. ஆனால் தம் தம்பி கண்ணனை மட்டும் கண்டிப்போடு வளர்த்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவர விரும்புவார்.

அன்றிரவு கண்ணன் வெகு நேரம் கழித்து வீடு திரும்பினான். மூர்த்திகூட அவனுக்கு முன்னால் வந்துவிட்டான்; ''ஏன் கண்ணா, இவ்வளவு நேரம்?'' என்று சாந்தமாகக் கேட்டேன். பசியோடு இத்தனை நேரம் இருந்திருக்கிறானே என்ற பாசத்தின் அடிப்படையில் தோன்றிய கேள்வியைக் கேட்டு அவனுக்குக் கோபம் ஏன்தான் வந்ததோ? ''நேரமாக வருவதற்குக்கூட காரணம் சொல்ல வேண்டுமோ?'' என்று கண்ணன் வெறுப்போடு கூறியதைக் கேட்டுக் கொண்டே மாடியிலிருந்து வந்த அவனுடைய அண்ணாவுக்கு ஆத்திரம் பொங்கிவந்தது. கண்ணனை ஓங்கி அறையப் போன அவரை நான் தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால் என்ன நேர்ந்திருக்குமோ? குழந்தை தெரியாத்தனமாய்ச் சொன்னதைப் பொறுத்துக் கொள்ளக் கூடவா அவரால் முடியவில்லை? ''நீ இடம் கொடுத்துத்தான் அவன் மிஞ்சிப் போயிருக்கிறான்'' என்று என்னைத் திட்டிவிட்டு அவர் மாடிக்குப் போய்விட்டார். கண்ணனைச் சமாதானப்படுத்திச் சாப்பிட அழைத்துப் போவோம் என்றெண்ணி அவனைப் பரிவோடு தட்டி அழைத்தேன். என்ன நினைத்துக் கொண்டானோ! அவனுடைய கோபம் என்மேல் பாய்ந்தது. மேஜையின் மேலிருந்த கண்ணாடிக் கோப்பையை எடுத்து என்மீது வீசினான். எனக்கு உலகமே சுழல்வது போலிருந்தது.

**கண்ணன்:**

எனக்கு உலகமே தலைகீழாகச் சுழல்வது போலிருந்தது, என் அண்ணி நான் எறிந்த கண்ணாடிக் கோப்பையால் தாக்கப்பட்டு ரத்தம் வழியக் கீழே விழுந்ததைக் கண்டதும்! ஆத்திரம் என் அறிவைச் சுட்டுவிட்டது! ஐயோ, அண்ணாவுக்கு இது தெரிந்தால்



என்னைக் கொன்றே விடுவாரே! என் இதயம் பயத்தால் துடித்தது; நான் ஒன்றும் செய்யத் தோன்றாமல் பதுமையாக நின்றிருந்தேன்.

என் அண்ணி தள்ளாடியபடி எழுந்து நெற்றியில் வழிந்துகொண்டிருந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டுத் துணி கட்டிக்கொண்டு, சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எறிந்ததை எல்லாம், நான் என்னை மறந்த நிலையில் கவனித்துக்கொண்டிருந்தேன்.

அண்ணி என் அருகில் வந்து, ''உனக்காக உள்ளே பலகாரம் வைத்திருக்கிறேன். சாப்பிட்டுவிட்டுச் சென்று படுத்துக்கொள்'' என்று கூறிவிட்டு எதுவும் நடக்காதது போல் மாடிக்குச் சென்ற காட்சி என் நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. அண்ணி, அண்ணாவிடம் நடந்ததைச் சொல்லிவிட்டால்..? நிச்சயமாக அண்ணி சொல்லிவிடுவாள்! என் மனம் நடுங்கித் தவித்தது; நான் மெதுவாக அண்ணியைத் தொடர்ந்து மாடிக்குச் சென்றேன்; அண்ணாவின் அறையிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது;

''என்ன சுசீ! தலையில் கட்டு?'' என்று என் அண்ணா படபடப்போடு கேட்டது என் காதில் தெளிவாக விழுந்தது. அண்ணி என்ன பதில் சொல்லப் போகிறாளோ? அண்ணா என்னை என்ன செய்யப் போகிறாரோ? காதைக் கூர்மையாக்கிக்கொண்டு கவனித்தேன்.

''படியில் தவறிக் கீழே விழுந்துவிட்டேன். அடி ஒன்றும் பலமாக இல்லை'' என்று என் அண்ணி கூறியதைக் கேட்டதும் நான் திகைத்து நின்றேன். கண்ணாடிக் கோப்பையால் தாக்கப்பட்டு கீழே விழுந்த அண்ணியைக் கண்டு கண்ணீர் சிந்தாத என் கண்கள், இப்போது அண்ணியின் வார்த்தைகளைக் கேட்டு ஆறாகப் பெருக்கின.

சோமு உண்டாக்கிய சலனம் அக்கண்ணீரில் கரைந்தது! ஓடிச் சென்று அண்ணியின் கால்களைப் பிடித்துக்கொண்டேன்.

## எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'மூட்டை'



தன் முகமூடியை உடனே அணிந்துகொண்டு.



புலிக்குட்டி தன் கத்தியைப் பற்றிக்கொண்டு விடுகிறன்........




ஒரு மரத்திலிருந்து ......
ஙொய்!
ஆ!
அடுத்த கணம் .......
ஐயையோ! விட்டு விடுங்கள்! ஓடிப்போய் விடுகி றோம்!
அவனை இந்தப் பக்கத்தில் கட்டு! ஆனந்தமாய் ஊஞ் சல் ஆடட்டும்!


காற்று வாங் கட்டும்! வா, நாம் போகலாம்!
இரண்டு குதிரைகள் லாபம்! இரண்டு பைப் பொன்னும், கத்திகளும் லாபம்!
யார் நீங்கள்?
காப்பாற்றுங் கள். ஓடி விடு கிறோம்.

(தொடரும்)

# ரேடியோ விமரிசனம்

## சிறுவர் நிகழ்ச்சி

அற்புதம்! வெகு பிரமாதம், 9-6-56 அன்று சிறுவர் நிகழ்ச்சியில் நடந்த பாலகுமார் நாடகத்தைத்தான் சொல்கிறேன். விரிவாக்கப்பட்ட வசனமும் பின்னணியில் ஒலித்த இசையும் எங்களை வெகுவாகக் கவர்ந்து விட்டன. நாடகத்தில் நடித்த இளம் அமெச்சூர் நடிகர்களுக்கு மெத்தவும் நன்றி. இவர்களுக்கு ஒரு பெரிய பாராட்டு விழாவே நடத்தலாம். இவர்களுடைய புகைப்படங்களைக் கண்ணனில் வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதே போல் பாரசீக ரோஜா மலரும் நாளையும், தூங்கும் அழகி விழிக்கும் நாளையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். நீங்களும் ரேடியோ நிலையத்தாரும் எங்கள் எண்ணத்தில் மண் போடாமல், மலர் தூவுவீர்கள் என்று நினைக்கிறேன்.

—V. சீனிவாசன், சஞ்சீவிராயன்பேட்டை.

## சிறுவர் நிகழ்ச்சி

9-6-56 நிகழ்ச்சியில் திரு ஆர்வி அவர்கள் எழுதிய 'பால குமார்' என்ற நாடகம் மிக நன்றாக இருந்தது. சிறுவர்கள் நன்றாக நடித்தனர். பால குமாராக நடித்தவன் பிரமாதம்!

10-6-56 (மணி மலர்) விசிறிப் பாட்டு நன்றாக இருந்தது. சிறுவர் சிறுமியர் சேர்ந்து நன்றாகப் பாடினார்கள். ஆளப்பிறந்தவன் நாடகம் நல்ல கருத்துள்ளதாக இருந்தது. 'உங்கள் பண்பாடு' என்ற தொடரில் ரேடியோ அண்ணா, குழந்தைகள் உள்ளத்தில் எல்லாம் நன்றாகப் பதியும்படி சொன்னார். 'ஞான சித்தி' கதைப் பாட்டு சுமார்தான்!

—A. சீனிவாசன், விழுப்புரம்.

## மணி மலர் (24-6-56)

ஆரம்பத்தில் அருணகிரிநாதரின் பாட்டு சுமார்தான், அருணகிரிநாதரின் வாழ்க்கை வர்ணனையை ரேடியோ அண்ணா விளக்கமாக எடுத்துக் கூறினார். 'ஈசன் அளித்த அறிவிருந்தும்' என்ற நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையவர்களின் பாடலைச் சிறுமிகள் மிகவும் நன்றாகப் பாடினார்கள். 'வெளி வேஷம்' என்ற கதைப் பாட்டு, கேட்க இனிமையாக இருந்தது.

—M. சுகுணராஜன், ஆம்பூர், (வ. ஆ.)

## மணி மலர்

24-6-56 அன்று நடந்த மணி மலரில் முதன் முதலாக ஸ்ரீ அருணகிரிநாதர் பாடிய பக்தியாய்' என்ற பாடல் சுமார்தான். ஸ்ரீ அருணகிரி நாதரைப்பற்றிய வாழ்க்கைச் சரிதத்தை ரேடியோ அண்ணா மிக அழகாக எடுத்துக் கூறினார். பிறகு திருப்புகழிலிருந்து ஒரு மாணவி பாடிய பாடல் சிறப்பாயிருந்தது. கேள்வி-பதில் உபதேசம் செய்தார் அண்ணா. மாணவர்கள் கேட்கும் எதிர்க் கேள்விகள் கசப்பாயிருந்தன. கொஞ்சம் பணிவோடு கேட்டிருக்கலாம். மிருகம், பறவை முதலியவைகள் எத்தனை ஆண்டுகள் வாழ்கின்றன என்பதைக் கூறினார் அண்ணா. ஈசன் அளித்த அறிவிருந்தும் என்ற பாடல் இனிமையாயிருந்தது. இடை இடையே [illegible] குறைந்தது. வெளிவேஷம் என்ற பாடல் நல்ல கருத்தை உடையதாகவும் நன்றாகவும் இருந்தது. 'அன்புள்ள தம்பிக்கு' என்ற தொடர் பயனுள்ள அம்சம். இதை அண்ணாவே படித்திருக்கலாம்.

—M. ஜக்கரியா, ஆவணியாள்புரம்.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

சென்னை-600 008

# பேனு நண்பர்கள்

1. S. சுவாமிநாதன், S/o V. ஸ்ரீநிவாஸ ஐயர், 45., கங்கையம்மன் கோவில் தெரு, ராயப்பேட்டை. சென்னை-14.

2. G. பழனி, 315. தம்புச்செட்டித் தெரு. சென்னை-1.

3. P. கோபிநாதன், S/o T. M. பழனிச்சாமி முதலியார், 18. சோமலாபுரம், ஆம்பூர் (வ. ஆ).

4. N. ரகுநாதன், வடக்கு ரத வீதி, நங்கவள்ளி அஞ்சல், சேலம் ஜில்லா.

5. N. ராகவன், 22. காமாட்சிப்பிள்ளைத் தெரு, நாகநாதபுரம், காரைக்குடி.

6. S. பழனியப்பன், 50. ராமுப்பிள்ளை சந்து, தெற்குவெளி வீதி, மதுரை.

7. KR. S. சுந்தரம், நெ. 1. ரோடு, வளையப்பட்டி, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

8. K. மஹபூப், S/o L. காதர்கான், ஸ்டேஷன் மாஸ்டர், சிவகாசி, ராமநாதபுரம் ஜில்லா.

9. A. அமீர் அமானுல்லா, ஐந்தாம் படிவம், D. பிரிவு, ராஜா ஹைஸ்கூல். ராமநாதபுரம்.

10. திண்டி, சி. டி. எம்., கிருஷ்ணப்பிள்ளை வீதி, திண்டிவனம் (தெ. ஆ).

11. இரா. அனந்தகிருஷ்ணன், C/o ராமநாதன், அப்பாவுப்பிள்ளை சந்து, கம்பம், மதுரை ஜில்லா.

12. P. G. ராமசந்திரன், 114. பேய்கோபுரத் தெரு, திருவண்ணுமலை, (வ. ஆ).

13. B. ராமன், C/o G. பாலகிருஷ்ணன், டாக்டர் விங்கிளேஸ் ஹவுஸ், தரம்பேட், நாகபுரி.

14. V. பாலகிருஷ்ணன், C/o V. L. விசுவநாதன், பிளாக் நெ. 1., பிளாட் நெ. 184., கோகுல் பேட், நாகபுரி.

15. K. N. ராஜா, 18. மிட்போர்டு பஜார், நார்டன் பிரிட்ஜ், இலங்கை.

---

## கட்டிட உதவி நிதி

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" என்று பாரதியார் பாடினுர் அல்லவா? அப்படிப்பட்ட பாலம் ஒன்றை அமைக்கும் வேலையில் சிறந்த சித்திர நிபுணரான திரு பெனிடிக்ட் ஈடுபட்டிருக்கிருர். யாழ்ப்பாணத்திலே ஓவியக் கலா நிலையம் என்ற ஒன்றை நிறுவி அதைப் பிரபலமாக நடத்தி வருகிருர் இவர். அந்த நிலயத்துக்கு ஒரு கட்டிடம் கட்ட நிதி திரட்டுவதற்காக அவர் சென்னை வந்திருக்கிருர். பல தலைவர்கள், பிரமுகர்களின் உருவப்படங்களை ஒரு நிமிஷம் முதல் ஐந்து நிமிஷங்களில் இவர் அப்படியே தீட்டிவிடுகிருர். அப்படித் தீட்டிய படங்களில் கையெழுத்தும் பெற்றிருக்கிருர்.

வினேபா பாவே, கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, செந்தமிழ்ச் செல்வர் ம. பொ. சி. ஆகிய மூவருடைய படங்களையும் வரைந்து, தனித்தனியாக ஆர்ட் காகிதத்திலே அச்சிட்டு மிகவும் குறைவாக இரண்டணு வீதம் விலையும் வைத்திருக்கிருர். பெரியவர்களுக்கு அதே பிரதி நாலணு விலை.

வேண்டுபவர்கள் இரண்டணு வீதம் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பித் தேவையுள்ள படங்களை வாங்கிக்கொள்ளலாம்.

முகவரி: திரு எஸ். பெனிடிக்ட், 30, பிள்ளையார் கோயில் தெரு, சென்னை-30.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542


## விற்பனையாகின்றன!

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பினால் அடங்கிவிடுவான் என்று எண்ணுகிறார்கள். ஆனால் புறப்பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டுகிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிறான். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது.

அடேயப்பா, அவன்தான்

# அபாயச் சங்கு

— நீலம் எழுதியது —

**விலை 8 அணா**

பாக்தாத் இளவரசனையும் கயூர் அரசகுமாரியையும் இரண்டு பூதங்கள் சேர்த்து வைத்துப் பிறகு பிரித்து விடுகின்றன. பாரஸீக ரோஜா அவர்களைச் சேர்த்து வைக்கிறது.

அராபியக் கதையைத் தழுவிய சித்திரக் கதை

# பாரஸீக ரோஜா

**விலை 5 அணா**

இரண்டும் தபாலில் வேண்டுவோர் 15 அணா மணியார்டர் செய்யவேண்டும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 13 அணா அனுப்பினால் போதும்.

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4**